# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 11 ஞாயிற்றுக்கிழமை (27-08-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:205


# யாழ்.,வன்னி மாவட்டங்களில் வரதர் அணி போட்டியிடும்!

## பொ.ஐ.முவுடன் இணைந்து கிழக்கிலும் வேட்பாளர்களை நிறுத்த முயற்சி

யாழ்ப்பாணம்,ஓகஸ்ட்27

**ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) சுயேச்சைக் குழுவாக யாழ்ப்பாணம், வன்னி ஆகிய மாவட்டங்களில் போட்டியிடும்.**

**யாழ்ப்பாணம் வந்துள்ள அந்த அணியின் தலைவரும், வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான அ.வரதராஜப்பெருமாள் நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக த.சுபத்திரன் போட்டியிடவிருப்பதாகவும் - தானும் அந்தப் பட்டியலில் போட்டியிட முடிவு செய்திருப்பதாகவும் - அவர் கூறினார்.

வன்னியில் கே.ஞானதாஸ்

(12ஆம் பக்கம் பார்க்க)



ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) தலைவரும், வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சருமான அ.வரதராஜப் பெருமாள் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போது எடுக்கப் பட்ட படம். அமைப்பின் பிரமுகர்களான த.சுபத்திரன், எஸ்.மோகன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (இ-3)

# ஜோசப் பரராஜசிங்கம் தலைமையில் மட்டக்களப்பில் கூட்டணி போட்டி

## நேற்று நடைபெற்ற கூட்டத்தில் முடிவு

மட்டக்களப்பு,ஓக.27

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட விருப்பவர்களின் பட்டியல் நேற்று முடிவு செய்யப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் கூடிய மாவட்டக்கிளைக் கூட்டத்தில் இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடவிருக்கின்றார்.

இந்தப் பட்டியலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா, எஸ்.ஜயானந்த மூர்த்தி, என்.அல்போன்ஸ்மேரி, எம். விமலேஸ்வரன், நிமலன் சவுந்தர நாயகம், மா.உதயகுமார், பி.சோம சுந்தரம் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

இந்தடவைத் தேர்தலில் புதுமுகங்களாகப் பத்திரிகையாளரான ஜயானந்த மூர்த்தி, ஆசிரியரான என்.அல்போன்ஸ்மேரி, சட்டத்தரணி ரி.சோமசுந்தரம் ஆகியோர் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது.

அதே சமயம் - மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல் தடவையாகப் போட்டியிடும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் நேற்று மாலை அங்குள்ள ஹோட்டல் ஒன்றில் கூடி

(12ஆம் பக்கம் பார்க்க)

# தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவே வரதராஜப்பெருமாள் அரசுக்கு ஆதரவு

## சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு

கொழும்பு,ஓக.27

வரதராஜப்பெருமாளைப் பொறுத்தவரை அவர் எந்தவிதமான கொள்கையையும் கொண்டவரல்லர். அவர் தமது இருப்பைக் காப்பாற்றிக்கொள்ளவே அரசாங்கத்துடன் இன்று இணைந்து செயற்படுகின்றார் என்பதுதான் உண்மையான விடயம்.

இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சந்திரிகா அரசு அண்மையில் ஓர் அரைகுறைத் தீர்வுத் திட்டத்தைக் கொண்டுவந்தது.

அந்த அரைகுறைத் தீர்வுத் திட்டம் என்பது வடக்கு - கிழக்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் காங்கிரஸ் தனித்து கொழும்பில் போட்டியிடும்

கொழும்பு,ஓக.27

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி எதிர்வரும் தேர்தலில் கொழும்பில் தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பில் தனித்துப் போட்டியிடுவது தொடர்பாக இடதுசாரிக் கட்சிகள் மற்றும் மலையக தமிழ் கட்சிகளுடன் தமிழ் காங்கிரஸ் கட்சி பேச்சுவார்த்தை நடத்தி உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் வாழும் தமிழ் மக்கள் தம்மைக் கைவிடமாட்டார்கள் என்றும் கொழும்பில் போட்டியிடுவதால் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நியமனம் பெற வாய்ப்பு ஏற்படும் என்றும் கட்சிப் பேச்சாளர் ஒருவர் கூறினார். (இ-5)

# யாழ்.உட்பட சகல மாவட்டங்களிலும் போட்டியிட பொ.ஐ.முன்னணி முடிவு

## பெண் ஒருவரையும் இங்கு வேட்பாளராக நிறுத்த முயற்சி

கொழும்பு,ஓக27

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி யாழ்ப்பாணம் உட்படச் சகல மாவட்டங்களிலும் போட்டியிடுவதென முடிவு செய்துள்ளது.

முன்னணியின் செயலாளரும், அமைச்சருமான டி.எம். ஜயரத்தின தலைமையில் நேற்றுக் கூடிய வேட்பாளர் தெரிவுக்குழு இந்த முடிவை எடுத்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரான வேல்முருகு தங்கராசா தலைமையில் வேட்பாளர்களை யாழ்.மாவட்டத்தில் நிறுத்துவதெனவும் அங்கு முடிவு செய்யப்பட்டது.

யாழ்.கிளையின் உபதலைவர் சி.சிவஞானம் கே. தேவகுலநாயகம், ஜெயக்குமார் ஆகியோரும் பட்டியலில் இடம்பெறவிருக்கின்றனர் என்றும் -

முக்கிய பிரமுகரான பெண் ஒருவரும் இந்தப் பட்டியலில் இடம் பெறலாம் என்றும்-வேல்முருகு தங்கராசா தெரிவித்தார். (இ-3)

# பொது வேட்பாளர் ஒருவரை அம்பாறையில் நிறுத்த முயற்சி

## தமிழ்க் கட்சிகள் இன்று கூடுகின்றன

அம்பாறை,ஓக.27

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்க்கட்சிகளை ஒன்றிணைத்து பொதுச் சின்னத்தில் போட்டியிட வைப்பது குறித்து தமிழர் மகாசபை எடுத்துவரும் முயற்சிகளின் இறுதிக் கட்ட நடவடிக்கையாக இன்று கூட்டம் ஒன்று அங்கு நடத்தப்படவுள்ளது.

அக்கரைப்பற்று ஆலடிவேம்பு மத்திய கலாசார மண்டபத்தில் மகா சபைத் தலைவர் கே.சுப்பிரமணியம் தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெறும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி. மற்றும் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் இரண்டு அணிகளின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வர். (இ-7-14)

## அமைச்சர்களின் பாரியார்கள் தொலைபேசி மூலம் பெண்களுக்குப் பிரசாரம்

வீடுகளில் உள்ள பெண்களுக்கு தொலைபேசி ஊடாகத் தேர்தல் பிரசாரங்களை நடத்தும் திட்டம் ஒன்றை பொ.ம. ஐ.முன்னணி ஆரம்பிக்கவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் அமைச்சர்களின் மனைவிமார் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றில் இது தொடர்பாக நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.

சகல அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் மனைவிமார்கள் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் இந்தப் பிரசார உத்தி குறித்து ஜனாதிபதி விளக்கியதாகக் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

தத்தமது தொகுதிகளில் வசிக்கும் பெண்கள் மற்றும் தாய்மாருடன் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு பொ.ஐ. முன்னணியின் கொள்கைகள், வேலைத் திட்டங்கள் குறித்து விளக்குமாறு இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டோரை, ஜனாதிபதி கேட்டுக் கொண்டார். பிரதமரின் பாரியார் குசும் விக்கிரமநாயக்கா உட்பட 40 பெண்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (ஐ)

## திருமலையில் கூட்டணி தலைவர்கள்

திருகோணமலை,ஓக.27

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதற்காக மாவட்டக் குழு இன்று கூடவிருக்கின்றது.

இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் நேற்று திருமலை வந்து சேர்ந்தார்.

கூட்டணியின் முக்கிய பிரமுகர்களான வீ.ஆனந்தசங்கரி, மாவை. சேனாதிராசா ஆகியோர் இன்று திருமலை வரவிருக்கின்றனர்.

இந்தக் கூட்டத்தை அடுத்து கூட்டணித் தலைவர்கள் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றனர் என்று கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

# தமக்கு ஒதுக்கிய அறையை ஏற்க ஜானக பெரேரா மறுப்பு!

கொழும்பு, ஓக27

இராணுவத்தின் பிரதம அலுவலர் என்ற வகையில் தமக்கு ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ அலுவலக அறையை ஏற்க மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா மறுப்புத் தெரிவித்துள்ளார்.

புதிய இராணுவத் தளபதி நியமிக்கப்பட்ட பின்னர் எழுந்துள்ள சூழ்நிலை காரணமாகவே இராணுவத் தலைமையகத்தில் உள்ள தமது அலுவலக அறையை அவர் நிராகரித்துள்ளார் என இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இராணுவத்தின் பிரதம அலுவலர் பதவியில் சில மாதங்களுக்கு முன்னரே ஜானக பெரேரா நியமிக்கப்பட்டிருந்தார். எனினும் அதற்கான அலுவலக அறை அவரிடம் ஒப்படைக்கப்படாமலே இருந்து வந்ததாகக் கூறப்படுகிறது.

இராணுவத்தின் பிரதிப் பிரதம அலுவலரான நீல் டயஸ் விரும்பினால் அந்த அறையை பயன்படுத்தட்டும் என்று ஜானக பெரேரா அவரிடம் கூறியுள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அத்துடன் பிரதமர் பதவிக்குரிய இரு நட்சத்திர சின்னங்களையும், கொடியையும் கூட ஜானக பெரேரா ஏற்க மறுத்து நிராகரித்துவிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரதம அலுவலருக்கான அறையை தற்போதைய இராணுவத் தளபதி

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பாகுபாடற்ற முறையில் எமக்கும் முழுச் சம்பளம் வழங்கவேண்டும்

## லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்கள் டக்ளஸிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.27

புதிய சம்பள நிர்ணய அடிப்படையில் எமது தலைமை அலுவலக ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படுவது போன்று எமக்குமபாகுபாடு அற்ற முறையில் முழுச் சம்பளமும் வழங்கப்பட வேண்டும்.

லங்கா சிமெந்து நிறுவனத்தின் தொழிற் சங்கம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளது.

ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவை மேற்படி சங்கத்தின் தூதுக்குழுவினர் நேற்றுச் சந்தித்து தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடினர்.

அப்பொழுது அவர்கள் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தனர்.

இந்தச் சந்திப்புக் குறித்து அந்த அமைப்பு விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யுத்த சூழ்நிலை காரணமாக 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் எமது நிறுவனம் மூடப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை சுமார் 10 வருட காலமாக இந்த நிறுவனத்தின் ஊழியர்களாக நாம், 1989ஆம் ஆண்டு மீளாய்வு செய்யப்பட்ட சம்பள நிர்ணய அடிப்படையில் 50 சத வீதமான சம்பளத்தையே பெற்று வருகின்றோம். ஆனால் எமது தலைமை அலுவலக ஊழியர்கள் இன்றைய சம்பள மீளாய்வின்படி முழுச் சம்பளமும் பெறுகிறார்கள்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் உள்ள ஊழியர்களாகிய நாம் மாதாந்தம் ஆயிரத்து 35 ரூபா தொடக்கம் ஆயிரத்து 404 ரூபா வரையுமே பெற்று வருகின்றோம் என டக்ளஸ் தேவானந்தாவிடம் நாம் முறைப்பாடு செய்தோம்.

அவர் இது குறித்துச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் உடனடியாகத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு சம்பள முரண்பாட்டை நீக்க உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

இப்படி செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி லங்கா சிமெந்து லிமிட்டட் ஊழியர்கள் சுமார் இருநூறுக்கும் மேற்பட்டோர் நேற்றுக் காலை யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் ஒன்றுகூடி ஸ்ரான்லி வீதியூடாக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அலுவலகம் வரை ஊர்வலமாகச் சென்றனர். (இ-7)

# இந்து சமய கலாசாரத்துக்கு தனி அமைச்சு உருவாக்க வேண்டும்

## சர்வதேச இந்துமதகுருபீடம் வேண்டுகோள்

கொழும்பு,ஓக.27

புதிய அமைச்சரவைத் தெரிவில் இந்துசமய கலாசாரத்துக்கென தனியான அமைச்சு ஒன்றை உருவாக்க வேண்டும் என சர்வதேச இந்துமத குரு பீடத்தின் தலைவர் சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐ.தே.கட்சி ஆட்சியில் பௌத்த, இந்து, இஸ்லாமிய சமய அலுவல்களுக்குத் தனித்தனி அமைச்சு இருந்தது. பின்னர் அவை இராஜாங்க அமைச்சுக்களாகக் குறைக்கப்பட்டன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தபோது அவை முற்றாக நீக்கப்பட்டு அனைத்து சமய விவகாரங்களுக்கும் பொதுவாக சமய கலாசார அமைச்சு உருவானது. அத்துடன் பௌத்த சாசன அமைச்சு மட்டும் இயங்கியது.

இந்து, இஸ்லாமிய சமயங்களுக்கு அதிகாரம் குறைக்கப்பட்ட சமய கலாசார திணைக்களங்கள் இயங்கின. பௌத்தமத அலுவல்களுக்கு மட்டும் பௌத்த சாசன அமைச்சு எனத் தனியான அமைச்சு இருக்க முடியுமானால் ஏன் இந்து கலாசார அலுவல்களுக்கு தனியான அமைச்சு இருக்கக்கூடாது?

மதத்தின் மீதும், கலாசாரப் பண்பாடுகளிலும் முழுமையாக நம்பிக்கை கொண்டவர்கள் இந்துக்கள்.

பௌத்த மதத்தை மதிப்பது போன்று இந்து மதத்துக்கும் மதிப்புக் கொடுத்து ஜனாதிபதி அடுத்து வரும் புதிய அமைச்சரவைத் தெரிவில் இந்து சமய கலாசாரத்துக்கென தனியான அமைச்சு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். (க)

# அழைப்புக் கட்டளை

இல.16 பிரிவு 55 (1)

மல்லாகம் என்னும் இடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில்

ஜெயலிங்கம் பெண் சுதர்சினி
(வைத்திலிங்கம் மகள்)
ஆவரானை, சுன்னாகம்.
வழக்காளி

வழ. இல. மநீக்கள் / 100

எதிராக

குமரையா ஜெயலிங்கம்,
மே / பா.அ.குமரையா
கொடிகாமம் வீதி, பலோலி
எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு,

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் பிராதின் நிவாரணத்தில் வேண்டி நிற்கும் நிவாரணங்களைப் பெறுவதற்காக இந் நீதிமன்றத்தில் உமக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளார்.

ஆதலினால் இதனோடு இணைக்கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2000 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 28 ஆந் நாளன்று, அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்துவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறு கட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில் சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப் படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
அ.ஸ்ரீதேவி
பதிவாளருக்காக.
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.

வரைந்தது
(பா.தவபாலன்)
வழக்காளியின் சட்டத்தரணி

குறிப்பு: விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலைநீவிர் பெறவிரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந் நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்குச் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும் 80 - உம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

பதிவாளர்.

2000 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 9 ஆந் நாளாகிய இன்று.
(மறுதவணை 12.09.2000)

(77714)

# ஸ்கந்தாவின் இதய அஞ்சலி

## அமரர் பண்டிதர் வல்லிபுரம் நடராசா

(முன்னாள் ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

எமது கல்லூரியில் நீண்டகாலம் அரும்பணியாற்றிய மூத்த தமிழ் ஆசான் **அமரர் பண்டிதர் வல்லிபுரம் நடராசா** அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைவதுடன், எமது அஞ்சலியைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர் கழகம்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.

(77728)

NOTICE
UNIVERSITY OF JAFFNA
FACULTY OF MEDICINE

**COMMENCEMENT OF LECTURES - 1999 & 2000 BATCHES**

The Lectures for the 1999 batch and 2000 batch (New Admissions) of students will commence on 09 October 2000.

2000.08.16 Registrar

(C/12702)

OXFORD INSTITUTE
K.K.S. வீதி சுன்னாகம்
SPOKEN ENGLISH AND GRAMMAR
BY.BRITTO
புதிய பிரிவு 11 ஆரம்பம்
02.09.2000 காலை 7 மணிக்கு
நிர்வாகி
பா.மணிவண்ணன்
(77715)

நாகம்மாள்
சுன்னாகம்.
அஜித் - ஷாலினி
நடிப்பில்
அமர்க்களம்
(ரீகல்) காட்சிகள்:
11.00, 2.30 (புதிய நேரம்)
(77724)

ராஜா
(யாழ்ப்பாணம்)
கார்த்திக், கௌசல்யா,
அப்பாஸ், ஹீரா, ராதாரவி
மற்றும் பலரின் நடிப்பில்
பூவேலி
காட்சிகள் 10.30, 2.00
(புதிய நேரம்)
(C/12325)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தங்கம்மா கனகரட்ணம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும், தற்போது ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட தங்கம்மா கனகரட்ணம் அவர்கள் நேற்று (26.08.2000) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா தங்கமுத்துவின் அன்புமிகு மகளும், காலஞ்சென்ற கனகரட்ணத்தின் பாசமிகு மனைவியும், தயாநிதி, கிருபாநிதி (பிரான்ஸ்), கிருபைராஜா (ஜேர்மனி), ருத்திராதேவி (பிரான்ஸ்), வரதராஜா (ஜேர்மனி), ரோகினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், நடேஸ்வரராஜன் (ஈசன்), சிவகுருநாதன், உமா, வித்தியானந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்புச் சகோதரியும், பினோத், சிந்தினி, றஜீவன், ஸ்ரேல் ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2000) ஞாயிற்றுக்கிழமை அவரது தற்காலிக இல்லத்தில் காலை 10 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நி.முகவரி: 41/6, இலந்தைக்குளம் வீதி,*
*கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.*

*த.முகவரி: மூத்தநயினார் கோயிலடி,*
*ஆனைக்கோட்டை,*
*கோவில் வடக்கு வீதி.*

தகவல்
நடேஸ்வரராஜன்
(ஈசன்)
(மருமகன்)

*(77710)*

## பாலகிருஷ்ணன் ஜெயராஜ (கண்ணன்)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஷ்ணன் ஜெயராஜ் நேற்று முன்தினம் (25.08.2000) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பாலகிருஷ்ணன் - வனஜா தம்பதிகளின் அன்பு மகனும், ஜெயகௌரி, ஜெயகுமார், காலஞ்சென்ற ஜெசிந்தா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2000) கேசாவில் பிள்ளையார் கோயில், வண்ணார்பண்ணையிலுள்ள இல்லத்தில் ந.ப 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*இல.30,*
*கேசாவில் பிள்ளையார் கோயிலடி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்
வி.பாலகிருஷ்ணன்
(தந்தை)

*(77727)*

## திருமதி கனகசபை நாகரத்தினம்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபை நாகரத்தினம் அவர்கள் நேற்று (26.08.2000) சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கனகசபை (முன்னாள் விரிவுரையாளர், லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக்கல்லூரி) அவர்களின் மனைவியும் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் வைத்தியகலாநிதி சுப்பிரமணியம் (முன்னாள் உள்ளூராட்சி சேவை மருத்துவ உத்தியோகத்தர்), காலஞ்சென்றவர்களான வைத்தியகலாநிதி விசுவலிங்கம் (முன்னாள் விரிவுரையாளர், லங்காசித்த ஆயுர்வேதக் கல்லூரி - யாழ்ப்பாணம்), வைத்திய கலாநிதி செல்வபாரதி (முன்னாள் உள்ளூராட்சி சேவை மருத்துவ உத்தியோகத்தர்) ஆகியோரின் தாயாரும், வைத்திய கலாநிதி கிருஷ்ணசாமி (வடஇலங்கை ஹோமியோபதி வைத்திய சங்கத் தலைவர்) அவர்களின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2000) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*396,(570) கே.கே.எஸ். றோட்,*
*யாழ்ப்பாணம்.*
*T.P - 021-3359*

தகவல்:
வைத்திய கலாநிதி
இ.சுப்பிரமணியம்
(மகன்)

*(77733)*

## வேலுப்பிள்ளை கருணைநாதன்

காரைநகர், தோப்புக்காட்டைப் பிறப்பிடமாகவும், பூநகரி, வேரவிலை வசிப்பிடமாகக் கொண்டவரும் டுபாயில் தொழில் நுட்பவியலாளராகப் பணிபுரிந்தவருமான வேலுப்பிள்ளை கருணைநாதன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் நித்தியபாக்கியத்தின் அன்புக் கணவரும், அன்பழகன், லோஜினி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார். அன்னார் வே.நவரத்தினம் (முன்னாள் பிரதம எழுதுவினைஞர், யாழ்.மாவட்டப் பதிவாளர் அலுவலகம்), வே.முத்துலிங்கம் (முன்னாள் உத்தியோகத்தர், உணவுத்திணைக்களம்), வே.சபாரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பூநகரியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*29/1, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
பத்மாவதி சபாரத்தினம்
(மைத்துனி)

*(C/12717)*

## திருமதி நளினி திருக்குமார்

(பொபி)

வடலியடைப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நளினி திருக்குமார் அவர்கள் நேற்று (26-08-2000) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இரத்தினசபாபதி - நாகரத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் சரோஜினிதேவியின் அன்புச் சகோதரியும் சண்முகநாதன் - நாகம்மா (கொக்குவில்) தம்பதிகளின் மருமகளும் திருக்குமாரின் (ஆசிரியர்-சுழிபுரம் விக்ரோரியா கல்லூரி) அன்பு மனைவியும் சொந்தூரன், சுகிர்தன் (விக்ரோரியா கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயக்குமாரி, விஜயகுமார், திவ்வியகுமாரி ஞானகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27-08-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக விளாவெளி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

*வடலியடைப்பு,*
*பண்டத்தரிப்பு.*

தகவல்:
ச.திருக்குமார்
(கணவர்)

*(77712)*

# ஒலிம்பிக் போட்டியின்போது ஆஸ்திரேலியாவில் பாரிய அணு உலையை தகர்க்கத் திட்டம்!

சிட்னி,ஓகஸ்ட்27

**ஆஸ்திரேலியாவில் ஒலிம்பிக் போட்டிகள் நடக்கும் சமயம்,அங்குள்ள பாரிய அணு உலை ஒன்றைத் தகர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக நியூஸிலாந்து ஆஸ்திரேலியாவை எச்சரித்துள்ளது.**

எதிர்வரும் செப்ரெம்பர்15ஆம் திகதி,புத்தாயிரம் ஆண்டின் முதலாவது ஒலிம்பிக் போட்டிகள் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் ஆரம்பமாக உள்ளன.

அந்தசமயம் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் அரங்குக்கு அருகே உள்ள அணு உலை ஒன்றைத் தகர்த்து, உயிராபத்துக்களை விளைவிக்கத் தீவிரவாதக் கும்பல் ஒன்று திட்டமிட்டுள்ளதாக நியூஸிலாந்து பொலீஸார் கூறியுள்ளனர். சமீபத்தில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஆப்கானிஸ்தான் அகதி ஒருவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட சிட்னி நகர வரைபடத்தில், அணு உலை உள்ள இடம் பிரத்தியேகமாக குறிப்பிடப்பட்டிருந்ததை அடுத்து மேற்கொண்ட விசாரணைகளில் சதித்திட்டம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சதித்திட்டம் தொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை என்றும் -

நியூஸிலாந்து மற்றும் ஆஸ்திரேலியப் பொலீஸார் கூட்டாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. (ஒ)

# மியான்மர் எதிர்க்கட்சித் தலைவி தெருவோரத்தில் போராட்டம்!

யாகூன்,ஓக.27

மியான்மரில் எதிர்க்கட்சித் தலைவி ஆங்-சங்.சூகி பொலீஸாருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக வீதியில தங்கிப் போராட்டம் நடத்தி வருகிறார்.

கடந்த வெள்ளிக்கிழமை கட்சி ஆதரவாளர்களைச் சந்திப்பதற்காக தலைநகர் யாகூனிலிருந்து சூகி புறப்பட்டுச் சென்ற போது, இடைமறித்த பொலீஸார், அவரது பயணத்தைத் தடை செய்தனர்.

இதனையடுத்து தெருவோரத்தில் காரை நிறுத்திவிட்டு அதிலேயே தங்கியுள்ள சூகி அங்கிருந்து நகர மறுத்து வருகிறார். சூகியின் தேசிய ஜனநாயக லீக்கட்சியின் உறுப்பினர் ஒருவரும் மற்றொரு காரில் அங்கே தங்கியுள்ளார். சூகியின் பயணத்துக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாததாலேயே அவரது பயணத்தைத தடுத்ததாக மியான்மரின் இராணுவ ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



1990 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் அமோக வெற்றி பெற்ற சூகியையும், அவரது கட்சியினரையும் அரசு நடத்த இராணுவ ஆட்சியாளர்கள் அனுமதிக்கவில்லை என்பதும், மியான்மரில் ஜனநாயக அரசை ஏற்படுத்த சூகி போராடி வருவதும் குறிப்பிடத்தக்கவை. (ஒ)

# ராஜீவ் கொலைச் சதி விசாரணை விரைவில் முடிவுக்கு வருகிறது!

## அமைச்சர் அத்வானி தகவல்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டது தொடர்பான விசாரணைகள் விரைவில் முடிவுக்கு வரும்



என்று உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி தெரிவித்தார்.

ராஜீவ் கொலைச்சதி குறித்து இதுவரை இந்தியப் பிரமுகர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு வந்த பல்முனைக் கண்காணிப்புக் குழு, அடுத்து வெளிநாடுகளிலும் விசாரணைகளை நடத்தி முடித்தவுடன் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் அறிக்கை தாக்கல் செய்யும் என்று நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அத்வானி தெரிவித்தார்.

ராஜீவ் கொலையின் பின்னணியில் இருந்தவர்கள் குறித்து விசாரணை நடத்திய ஜெயின் கமிஷன், இந்தியப் பிரமுகர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் சிலரின் பெயரைக் குறிப்பிட்டு அவர்களிடம் மேலும் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருந்ததுடன் -

அதற்காகப் பல்முனை விசாரணைக்குழு ஒன்றையும் அமைத்திருந்து நினைவிருக்கலாம். (ஒ-5)

## சட்ட விரோதமாக

# குரோஷியாவிற்குள் நுழைய முயன்ற இலங்கையர் கைதாகாமல் தப்பினர்!

சரஜீவோ,ஓக.27

சட்டவிரோதமாக குரோஷியாவிற்குள் நுழைய முயன்ற 15 இலங்கையர்கள் கைது செய்யப்படுவதற்கு முன்னர் தப்பிச் சென்றுள்ளனர்.

கடந்த வாரம் பொஸ்னியாவின் மேற்குப் பகுதி எல்லையினூடாக மூடப்பட்ட இரண்டு வாகனங்களில் குரோஷியாவிற்குள் நுழைய முயன்ற 15இலங்கையர்களை எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்ய முயற்சித்ததாகவும் -

ஆனால் 15 பேரும் வாகனங்களைக் கைவிட்டு தப்பியோடி விட்டதாகவும் - கூறப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகளுக்குள் சட்டவிரோதமாக நுழைவதற்கு சமீபகாலம் வரை இலங்கையர் உட்பட ஆசிய நாட்டவர்கள் பலர் உக்ரைன் எல்லையை உபயோகித்து வந்ததாகவும் -

அங்கு பாதுகாப்புத் தீவிரப்படுத்தப்பட்டதை அடுத்து சட்டவிரோத குடியேற்ற வாசிகள் பொஸ்னியா ஊடாகக் குரோஷியாவிற்குள் நுழைந்து, அங்கிருந்து ஐரோப்பியாவிற்குள் செல்வதாகவும - கூறப்படுகிறது.

திருட்டுத்தனமாக எல்லை தாண்டிச் செல்பவர்கள் மூடிய வாகனங்களில் பயணம் செய்யும்போது மூச்சுத் திணறியும், பல்வேறு விபத்துகளினாலும் உயிரிழந்த சம்பவங்கள் நடைபெற்ற போதும் சட்டவிரோதமாக உயிரைப் பணயம் வைத்து ஐரோப்பாவிற்குள் நுழைபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாக குரோஷிய குடியேற்ற அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ-5)

## தமிழக, கர்நாடக அரசுகளால்

# வீரப்பனின் நிபந்தனையை நிறைவேற்ற 10 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டது!

சென்னை,ஓக.27

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனின் நிபந்தனையை நிறைவேற்ற தமிழக, கர்நாடக அரசுகள் 10 கோடி ரூபா ஒதுக்கியுள்ளன.



நடிகர் ராஜ்குமாரின் மனைவி பர்வதம்மா, இருமாநில முதல்வர்களுடன், கணவரின் விடுதலை தொடர்பாக ஆலோசனை நடத்திய போது எடுத்த படம்.

1992-93 காலப் பகுதியில் வீரப்பனைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட அதிரடிப் படையினரால் பாலியல் வன்முறைக்கு ஆளான பெண்களுக்கும், கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் பாதிப்படைந்தவர்களுக்கும் நஷ்டஈடு வழங்குவதற்காக இரு மாநில அரசுகளும் தலா 5 கோடி ரூபா வீதம் 10 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வீரப்பனிடம் அரசுத் தூதர் கோபால் வாங்கி வந்த ஒலி மற்றும் ஒளிநாடாக்களில் உள்ள விடயங்கள் குறித்து சென்னையில் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழக முதல்வர் கருணாநிதி மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டைத் தெரிவித்தார்.

கர்நாடக சிறையில் உள்ள 51 தமிழர்கள் உட்பட தடா சட்டத்தில் வழக்குகளைச் சந்தித்துவரும் 121 தமிழர்கள் மீதான அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் விலக்கிக்கொள்ளப்படும் என்றும் தமிழ் தீவிரவாதிகள் 5 பேரையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கருணாநிதி மேலும் தெரிவித்தார்.

வீரப்பன் கேட்டுள்ள விளக்கங்களுடன் அரசுத் தூதராக மீண்டும் 'நக்கீரன்' கோபால் நாளை திங்கட்கிழமை காட்டுக்குள் செல்வார் என்றும் கருணாநிதி கூறினார்.

கடந்த மாதம் 30ஆம் திகதி கன்னட நடிகர் ராஜ்குமார் உட்பட 4 பேரை சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் கடத்திச் சென்றதும் அவர்களை விடுவிக்க தமிழக, கர்நாடக அரசுகளுக்கு வீரப்பன் நிபந்தனை விதித்ததும் தெரிந்தவையே. (ஒ)

# ஆந்திராவில் பலத்த மழை; 140 பேர் பலி!

ஹைதராபாத்,ஓக.27

இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில் கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவில் பெய்து வரும் பலத்த மழையால் 140 பேர் உயிரிழந்துள்ளனர். பல கோடி ரூபா பெறுமதியான பயிர்கள் அழிந்துள்ளன.

குண்டூர், கிருஷ்ணா, பிரகாசம் உட்பட பல பகுதிகள் மோசமான வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

பல இடங்களில் போக்குவரத்து, தகவல் தொடர்பு ஆகியன துண்டிக்கப்பட்டுள்ளன. வெள்ளத்தில் மூழ்கிய இடங்களில் சிக்கியவர்களை காப்பாற்றும் பணிகளில் இராணுவமும், விமானப்படையும் ஈடுபட்டுள்ளன. (ஒ)

# இந்தியாவில் இஸ்ரேலிய அமைச்சர்

புதுடில்லி,ஓக.27

இஸ்ரேலின் பிராந்திய வளர்ச்சிக்கான அமைச்சர் சீமோன் பீரிஸ் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இந்திய ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன், பிரதமர் வாஜ்பாய் ஆகியோருடன் பேச்சு நடத்திய பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த இஸ்ரேலிய அமைச்சர் பலஸ்தீனத்தை எதிர்த்து இஸ்ரேலுக்கு ஒரு தலைப்பட்சமாக இந்தியா ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை என்றும் ஆனால் அமைதியின் பக்கம் இந்தியா இருக்கும் என்றும் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் சுதந்திரப் பலஸ்தீனப் பிரகடனத்துக்கு ஆதரவு கேட்டு இந்தியத் தலைவர்களை சந்தித்து விட்டு சென்ற சில நாள்களில் இஸ்ரேலிய அமைச்சர் இந்தியா வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## உலக அரங்கில்

# மூளைக காய்ச்சலால் 17 குழந்தைகள் மரணம்!

புதுடில்லி,ஓக.27

இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலத்தில் வேகமாகப் பரவி வரும் ஜப்பானிய மூளைக் காய்ச்சல் நோய்க்கு 17 குழந்தைகள் பலியாகியுள்ளனர். நூறுக்கும் அதிகமானோர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# ஏவுகணை சோதனை

தரையில் இருந்து வானில் பாய்ந்து தாக்கும் 'திரிசூல்' ஏவுகணை ஒரிசாவின் சாந்திப்பூர் தளத்தில் இருந்து ஏவிச் சோதனை நடத்தியதாகவும் -

சோதனை வெற்றிகரமாக முடிந்துள்ளதாகவும் -

இந்திய அரசு தெரிவித்துள்ளது.

50 கிலோ மீற்றர் தூரத்துக்கு பாய்ந்து தாக்கக் கூடிய திரிசூல் ஏவுகணை கடற்படைக்காக வடிவமைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

# நஷ்டஈடு, கைதிகள் விடுதலை குறித்து கோபாலிடம் வீரப்பன் வலியுறுத்தல்

சென்னை,ஓக.27

நடிகர் ராஜ்குமாரையும் மற்றவர்களையும் விடுவிக்க இடப்பட்டுள்ளவற்றில் இரு நிபந்தனைகளைக் கட்டாயம் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்பதில் வீரப்பன் மிக உறுதியாக உள்ளதாக இரண்டாவது தடவையாக வீரப்பனைச் சந்தித்துவிட்டு சென்னை திரும்பியுள்ள 'நக்கீரன்' கோபால் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசும்போது கூறினார்.

மேலும் கோபால் பேசுகையில்:-

வீரப்பனுக்கு உதவியதாக ஏராளமான தமிழர்கள் மீது தடா சட்டத்தின் கீழ் கர்நாடக அரசு வழக்குத் தொடர்ந்திருந்தது.

அவர்களில் 3பேர் தற்கொலை செய்துகொண்டனர். 51 பேர் கர்நாடகாவில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். 70 பேர் பிணையில் வெளிவந்து வழக்குகளைச் சந்திப்பதற்காக அலைக்கழிந்து கொண்டிருக்கின்றனர்.

இவர்களின் துன்பத்துக்குத் தானே காரணம் என்பதால் இவர்களது விடுதலையில் வீரப்பன் உறுதியாக உள்ளார். அத்துடன் தன்னைத் தேடும் நடவடிக்கையின் போது பெண்கள் உட்படப் பலரும் அதிரடிப் படையால் பாதிப்படைந்த



தால் அவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்பதையும் வீரப்பன் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறு கோபால் தெரிவித்தார். (ஒ)

# புங்குடுதீவு மக்கள் ஒன்றியம் ஜெர்மனியில் நடத்திய விழா!

ஜெர்மனியில் பேர்ன் நகரில் புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியத்தின் 3ஆம் ஆண்டு நிறைவுவிழா நேற்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

இந்த விழாவில் புங்கையூர் எஸ்.ரமணனின் "பாயும் புலி பண்டார வன்னியன்" என்ற நாடகம் உட்பட ஐரோப்பாவில் வாழும் இலங்கையர்கள் பங்குகொண்ட நடன நிகழ்ச்சிகள், கவியரங்கம், பட்டிமன்றம் ஆகியனவும் இடம்பெற்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிற்சர்லாந்துப் பணியகப் பிரதிநிதியும், 'வெரித்தாஸ்' தமிழ்ச்சேவைப் பொறுப்பாளர் அருட்தந்தை ஜெகத் கஸ்பாரும் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர்.



சமீபத்தில் காஷ்மீரில் தீவிரவாதிகள் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான பீஹார் தொழிலாளர்களின் இறுதிச் சடங்கில் இறந்தவர்களது மனைவிமார் கதறி அழும் உருக்கமான காட்சி.

# இந்திய மாணவர்கள் சிறையில்!

காட்மண்டு,ஓக.27

நேபாளத்துக்குச் சுற்றுலாவுக்கென சென்ற மூன்று இந்திய மாணவர்களுக்கு அந்நாட்டு நீதிமன்றம் மூன்று மாதகால சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

இந்த மாணவர்கள் தமது பயணச் செலவுக்காக எடுத்துச் சென்ற பணத்தில் 71ஆயிரம் ரூபாவுக்கு ஐநூறு ரூபா பணத்தாள்களைக் கொண்டு சென்றனர். இந்திய ஐநூறு ரூபா பணத்தாள்களை நேபாளத்துக்கு எடுத்துச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இத்தடையை மீறி மாணவர்கள் செயற்பட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு நேபாள நீதிமன்றம் மூன்று மாதகால சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. (க)

# நன்றி நவிலல்

மட்டுவில் தெற்கு வேம்படிக் கந்தசாமி கோயிலைச் சேர்ந்த எமது குடும்பத் தலைவி

திருமதி

**கார்த்தியாயினிஅம்மா பாலசுப்பிரமணியக் குருக்கள்**

அவர்களது மரணச்செய்தி அறிந்து நேரில் வந்தும் கடிதம் மூலம் எங்களுக்கு அனுதாபம் தெரிவித்தும் ஆறுதல் கூறியும் மற்றும் உதவிகள் புரிந்தவர்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மக்கள், மருமக்கள்.

சிவன்கோயிலடி,
ஆவரங்கால், புத்தூர். (77679)

# 5-ம் ஆண்டின் நினைவலைகள்



மலர்வு 1935 — 04 — 21

உதிர்வு 1995 — 08 — 27

திருக்குடும்பக் கன்னியர்

**அருட் சகோதரி**
**பிறிஸ்கா சந்தியாப்பிள்ளை**

யேசுவின் அருளால் வந்துதித்த
அருட் சகோதரி பிறிஸ்காவே!
நீங்கள் மறைந்த ஐந்தாண்டு
நினை வலைகள் மோத
அணை கடந்த வெள்ளமாய்
துயரலைகள் பாயுதம்மா!
இணையில்லா நின் சேவை
போற்று தற் கரிதம்மா!
நினைவாக நாமென்றும்
இதயமதில் போற்றிடுவோம்!

சகோதர, சகோதரிகள்,
குடும்பம்.

குருநகர்,
யாழ்ப்பாணம். (77666)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஒக 27

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் மேற்கு வீதி, முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் பிற்பகல் 5 மணிமுதல் 6 மணி வரை கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ நித்தியானந்தசர்மா நிகழ்த்தி வரும் 'மகாபாரதம்' இசைச் சொற்பொழிவுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'கீசகன் வதம்' என்ற தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும். (க-30)

★ ★ ★

வடபிராந்திய இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்றுவரும் தெய்வீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை 'ஆன்மீகத்தில் அரிவையர்' எனும் தலைப்பில் சிவத்திரு. அன்னதாசன் க. ஆனந்தராஜா உரை நிகழ்த்துவார் (க-30)

தேர்த் திருவிழாவை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் பண்ணிசை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் மூத்த, இளைய தலைமுறையினர்கள் ஒருங்கிணைந்து பண்ணிசை இசைப்பர். (க—111)

★ ★ ★

நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் காலை 7 மணிக்கு விசேட கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும். (க—111)

# ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை
## வேலைகளுக்கான
# கேள்வி அறிவித்தல்

ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப் பத்திரங்கள் 06-09-2000 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் 'எம் 9' அல்லது அதற்கு மேற்பட்டதரத்தில்பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்களிடமும், பொதுஸ்தாபனங்களிடமும் இருந்து கோரப்படுகின்றன. கீழே குறித்த தொகையை செலுத்தி கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்பவர்கள் கணிய அளவுச் சிட்டை, கொடுப்பனவு அறிக்கைஎன்பன தயாரிக்கக்கூடியவர்களாக இருத்தல்வேண்டும்.
03 கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து ''தலைவர், ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை'' க்கு பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இட்டு இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு 07—09—2000 நண்பகல் 12 00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
04. கேள்விகள் 08—09—2000 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு திறக்கப்படும் அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
05 கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ சபைக்கு உரிமையுண்டு.
06. மேலதிக விவரங்களை ஊர்காவற்றுறை பிரதேச சபை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| தொ. இல | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01. | ஊர்காவற்றுறை மண்குழி வீதித் திருத்த வேலை | 2500/- | 250/- |
| 02. | ஊர்காவற்றுறையில் 08 (எட்டு) வீட்டுத் திட்ட வேலை | 13000/- | 1300/- |
| 03. | கரம்பொன் மேற்கு தேவன்கணைபிள்ளையார் கோயில் புனரமைப்பு வேலை | 1000/- | 100/- |
| 04 | கரம்பொன் கிழக்கு ஞானவைரவர் சனசமூக நிலைய கட்டட வேலை | 1000/- | 100/- |

நா. திருச்செல்வம்
உப தலைவர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

ஊர்காவற்றுறை பிரதேச சபை,
ஊர்காவற்றுறை.
25—08—2000 (சி/12698)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராக இருந்தவரும் சிறந்த பண்பாளராக விளங்கியவருமான

**அமரர் கார்த்திகேசு மாணிக்கவாசகர்**

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த துயரம் அடைகிறோம். மனித நேயத்துடன் தீவக மக்களுக்குச் செய்த உதவிகள் மறக்க முடியாதவை. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்
பிரதேச செயலக நலன்புரிக் கழகமும்.

பிரதேச செயலகம்,
தீவுப்பகுதி தெற்கு,
வேலணை. (77708)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## சித்தமருத்துவ சத்திர சிகிச்சை மாணி (BSMS)
## புதிய அனுமதி - 1999/2000

மேற்படி பட்டப்படிப்பிற்கான கற்கை நெறிக்கு புதிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கற்கை நெறிக்காலம்: 5 வருடங்கள்

விண்ணப்ப முடிவு திகதி: 29-09-2000

### அனுமதிக்கான நிபந்தனைகள்

மேற்படி கற்கைநெறிக்கு 1997/1998/1999 ஆகிய ஆண்டுகளில் க.பொ.த (உயர்தர) தேர்வுகளில் கீழ்க் காணப்படும் கல்வித் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

### அனுமதிக்கு வேண்டிய ஆகக் குறைந்த கல்வித் தகைமை:

ஒரு விண்ணப்பதாரி:

1. அ) 1997/1998/1999 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர (உயர்தர)ப் பரீட்சையில் ஒரே தடவையில் தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகிய நான்கு பாடங்களிலும் சித்தியடைந்திருப்பதுடன்

அல்லது

ஆ) 1997/1998/1999 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல் ஆகிய 3 பாடங்களில் சித்தியுடன், பௌதிகவியலில் 25%ற்குக் குறையாத புள்ளிகளைப் பெற்றிருப்பதுடன்,

11. நான்கு பாடங்களுக்குமாக 180 புள்ளிகளைப் பெற்றுப் பல்கலைக்கழக அனுமதிக்குரிய தகுதியையும் பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்குறித்த கல்வித் தகைமைகளுக்கு அமையாத, பூரணப்படுத்தப்படாத, தெளிவில்லாத, விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை யாழ். பல்கலைக்கழக சிறாப்பர் கருமபீடத்திலோ, யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையிலோ, ரூபா 50/-ஐ செலுத்திய பற்றுச்சீட்டைப் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் பெறவிரும்புவோர் நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு, 50/- செலுத்திப் பெற்றுக்கொண்ட காசுக்கட்டளையுடன் முத்திரை ஒட்டப்பட்ட சுய விலாசமிடப்பட்ட 20X10 செ.மீ. அளவுள்ள கடித உறையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக களஞ்சியம், யாழ்ப்பாண ஐக்கிய வியாபார சங்கம், ஜி பி. 4 சென்றல் வீதி கொழும்பு — 13, தொலைபேசி இலக்கம்: 435620 எனும் முகவரிக்கு அல்லது பிரதிப்பதிவாளர், பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை, யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்புவதன்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் 23X10 செ.மீ. அளவு கொண்ட கடிதவுறையில் இடதுபக்க மூலையில் சித்தமருத்துவக் கற்கைநெறிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பம் அனுப்ப/ஒப்படைக்க வேண்டிய முகவரி

உதவிப் பதிவாளர்,
பரீட்சைகளும் அனுமதிகளும்,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

பதிவாளர்.
25—08—2000 (சி/ 12695)

உதயன்

## அரசு பயன்படுத்துமா?

இலங்கை இராணுவத்தின் 16 ஆவது தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல நேற்று முன்தினம் பதவியேற்றுள்ளார். இது வரை அந்தப் பதவியிலிருந்த லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியா ஓய்வுபெற்றுள்ளார்.

இலங்கையைப் பொறுத்தவரை மிகவும் நெருக்கடியான ஒரு கால கட்டத்தில் லயனல் பலகல்ல இந்தப் பதவியை ஏற்றுள்ளார். வன்னியில் இழந்த பகுதிகளை படையினர் திரும்பவும் கைப்பற்ற முடியாத நிலைமை, குடாநாட்டின் ஒரு பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டிருப்பதால் படைத்தரப்புக்கு ஏற்பட்ட அபகீர்த்தி, விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரைத் தீவிரப் படுத்தும்படி தெற்கில் தீவிரமடைந்து வரும் பேரினவாதிகளின் கூச்சல், குடாநாட்டின் எந்தவொரு பகுதியிலாவது விடுதலைப்புலிகள் மீண்டும் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தலாம் என்ற கள நிலைவரம், தேர்தல் நெருங்குவதால் பாதுகாப்புக் கருதி வடக்கு - கிழக்கை மட்டும் அன்றி முழு நாட்டையுமே ஒரு போர்ச் சூழலில் வைத்திருக்க வேண்டிய கட்டாய நிலை ஆகியவற்றுக்கு மத்தியிலேயே புதிய தளபதியின் பதவியேற்பு இடம் பெற்றுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 55 வயதைப் பூர்த்தி செய்து ஓய்வுபெற்றவர் லயனல் பலகல்ல. ஜனாதிபதியின் விசேட பணிப்பின் பேரில் அவர் இராணுவத்தின் பிரதித் தளபதியாகவும் தற்பொழுது தளபதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

லயனல் பலகல்ல, யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியாகவும் வன்னி மாவட்டப் படை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான தளபதியாகவும் முன்னர் பணியாற்றியவர். ஆகவே தமிழ் மக்களின் பிரச்சினைகளை அவர் நன்கு அறிந்தவர் என்பதில் சந்தேகம் இல்லை.

தமது பதவியேற்பு வைபவத்தின் பின்னர் அவர் ஊடகவியலாளர்களுடன் பேசுகையில், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான ஓர் அரசியல் தீர்வு கட்டாயம் தேவை என்று வலியுறுத்தியுள்ளார். இது வரவேற்கத்தக்கது.

ஈழப்போர் ஆரம்பமான பின்னர் பதவியேற்ற இராணுவத் தளபதிகள் தமது பதவியேற்பு வைபவங்களின் போது சமாதானத்துக்காகக் குரல் கொடுத்ததாகத் தகவல் இல்லை. இதுவரை தளபதியாக இருந்த ஸ்ரீலால் வீரசூரியா தமக்கு அளிக்கப் பட்ட பிரியாவிடை வைபவத்தில் பேசும்போது போரை முன்னெடுத்துச் செல்லும் யோசனைகளையே தெரிவித்திருந்தார். படையினர் யுத்தத்தைத் தமது கடமையாக ஏற்றுக் கொள்ளவேண்டும்; அதனைத் தொழிலாகக் கொள்ளக்கூடாது என்று அவர் அறிவுறுத்தியிருந்தார். விடுதலைப்புலிகளின் இராணுவ வெற்றிகளின் இரகசியமும் இதுதான் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

20 ஆயிரம் படைகளைத் திரட்டித் தந்தால் விகாரமாதேவி அன்று யுத்த முனைக்குச் சென்றது போன்று ஜனாதிபதியும் செல்வாரா? என்று தேசிய மகா சங்கத் தலைவர் மாதுலுவாவே சோபித தேரர் சவால் விடுத்து வருகிறார். குடாநாட்டில் சண்டையில் ஈடுபட்டுள்ள படையினருக்குத் தலைமை வகிக்க மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவையும் மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவையும் மீண்டும் அங்கு அனுப்பும்படி பௌத்த மகா சங்கம் கோரி வருகிறது.

மறுபடியும் சிங்கள உறுமய அமைப்பு லயனல் பலகல்லவின் நியமனத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி உள்ளது. இப்படியான சூழ்நிலையிலேயே புதிய இராணுவத் தளபதி நியமிக்கப்பட்டுள்ளார். இருப்பினும் அரசியல் தீர்வின் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசின் சமாதான முயற்சிகளில் இராணுவத்தின் பங்கும் பிரதானமானது. அரசு சமாதான முயற்சிகளில் ஈடுபடும் போது இராணுவம் அதற்கு முரணாகச் செயற்பட்டால் சமாதானம் கைகூடமாட்டாது. எல்லாமே குழம்பி விடும். ஆகவே லயனல் பலகல்லவின் நியமனத்தை அரசு நன்கு பயன் படுத்திக்கொண்டு அரசியல் தீர்வை நாடுவதற்கு முன்வரவேண்டும்.



நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காமத்தின் சார்பில் நாதஸ்வரக் கலைஞர் பி.எஸ்.பிச்சையப்பாபிள்ளைக்கு அண்மையில் பாராட்டு விழா இடம்பெற்றது. இந்நிகழ்ச்சியில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், பதில் நீதிபதி க.கேசவன், சட்டத்தரணி கே.கனகரத்தினம் ஆகியோருடன் பிச்சையப்பா அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (ஐ-103)

*படம்: நல்லூர் செய்தியாளர்*



தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். ஆதீனம் இடம்பெயர்ந்த மக்களுக்கும், குடும்பத் தலைவனை இழந்த விதவைகள் மற்றும் ஊனமுற்றவர்களுக்கும் உதவிப் பொருள்களை வழங்கி வருகிறது. அண்மைய அசம்பாவிதங்களால் இடம்பெயர்ந்து ஆனைக் கோட்டையில் முகாம் ஒன்றில் தங்கியிருக்கும் மக்களுக்குத் தென்னிந்தியத் திருச்சபைப் போராயர் அதிவண. சு.ஜெபநேசன் பொருள்களை வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ)

### தெல்லிப்பழை துர்க்கை அம்மன் உற்சவம்:

# பண்பாட்டுக்கு மாறான ஆடைகள் அணிந்து வருவதைத் தவிருங்கள்!

## தங்கம்மா அப்பாக்குட்டி வேண்டுகோள்

நல்லூர், ஓக.27

இம்முறை சைவத்தமிழ்ப் பண்பாட்டுக்கு மாறான ஆடைகளை அணிந்து வருகை தருவோர் துர்க்கை அம்மன் ஆலயத்தின் உள்வீதிக்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் 30ஆம் திகதி தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பமாகிறது.

எமது கலாசாரம், பண்பாடுகளைப் பேணவேண்டியது ஒவ்வொரு தமிழர்களினதும் கடமையாகும். இவற்றைப் பாதுகாக்கும் பணியில் ஆலயங்கள் முதலிடம் வகிக்கின்றன.

ஆலயத்தில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் எமது கலாசாரத்துடன் இணைந்தவை. அதைப்பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் இருந்து சைவசமயத்தவர்கள் விலகிச்செல்லக் கூடாது. இன்றைய நிலையில் எமது கலாசாரங்களையும் பண்பாடுகளையும் பேணுவதன் மூலம் எம்மை நாம் பலப்படுத்திக்கொள்வது அவசியம். பெண்களும் குழந்தைகளும் நகைகள் அணிந்து வருவதைக் கூடிய அளவு குறைத்துக் கொள்வது விரும்பத்தக்கது - எனவும் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தெரிவித்தார். (ஐ-111)

# ஜானக பெரேராவுக்கு ஏற்பட்ட நிலைமை கவலை அளிக்கின்றது

## தேசிய சங்க சபா தெரிவிப்பு

இராணுவத்தில் சிறப்பாகக் கடமையாற்றும் மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவுக்கு ஏற்பட்ட நிலைமை குறித்து இலங்கை தேசிய சங்க சபா கவலை தெரிவித்துள்ளது.

ஜானக பெரேராவுக்கு ஏற்பட்ட நிலை தொடர்பாக விரிவாக விளக்குவதற்கு தற்போதைய பத்திரிகைத் தணிக்கை தடையாக உள்ளது. இது போன்ற நடவடிக்கைகளால் நாட்டுக்கும் மக்களுக்குமே பேரிழப்பு ஏற்படுகிறது என சங்கசபாவின் பொதுச்செயலாளர் சித்தேபானே தம்மாலங்கார தேரர் தெரிவித்தார். (ஐ-186)

### மாநகரசபைக் கூட்டம் நாளை

யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் நாளை திங்கட்கிழமை, பிரதிமேயர் சட்டத்தரணி நடராஜா இராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் கலந்துகொள்வதற்காக கூட்டணி உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். (ஐ-173)

**உதயனுக்கு**

காலம் யாருக்காகவும் - காதலுக்காகவும் கூட காத்திருப்பதில்லை. இன்று, கனவுதான் கண் கண்ட உண்மை.. நாளை வந்ததுமே இது வெறும் சூனியமாக, உண்மை அற்றதாகப் போய்விடும்..

- *திபேஷ் தாஸ்*

**நாளை**

ஆவணி 12

திங்கட்கிழமை

*திதி:* சதுர்த்தசி மாலை 6.44 வரை,


*நட்சத்திரம்:* ஆயிலியம் முன் இரவு 7.57 வரை

*சுபநேரம்:* 12.05 - 1.35

*ராகுகாலம்:* 7.35 - 9.05

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்



### காத்தல் தொழிலே சப்பறக்காட்சி

முன்னைக்கும் முன்னைப் பழம் பொருளானாய்
உன்னைக் கைகூப்பி வழிபட்டார் எல்லோரும்
பன்னிரு கரத்தானே பாதமலர் பணிந்தோம்
இந்நிலை யையின்று இனிதாய் மாற்றுவாய்!

சித்திர ரூபமோ சிவமைந்தன் காட்சி
காத்தல் தொழிலே சப்பறக் காட்சி
காத்தல் தொழிலின் உயர்நிலை நின்று
நேர்த்திகள் தீர்க்கும் நல்லை வாழ்கந்தா!

- *சைவப்புலவர் செ.கந்த.சத்தியதாசன்*

### நலிந்தே அலைவதும் நல்லதோ!

நல்லை நகரினில் ஞானவேலாய் நின்று
நம்மைக் காத்திருக்கும் வேலையா — இங்கு
எல்லை மீறும்போரால் ஏதிலியாய்ப் போனோர்
ஏங்கும் நிலையும் உன் லீலையா?

நாளும் உனக்கு விழாவுண்டு ஊர்க்கோலம்
நல்லூரில் நீபோகத் தேருண்டு — ஆனாலும்
பாழும் "பல்குழலுக்கு" பயந்தோடி ஊர்நீங்கி
வாழ்வோரைக் காத்திட யாருண்டு?

சங்கத் தமிழ் காத்த புலவர்க்கெல்லாம் அன்று
தலைமைக் கவிஞன் நீ அல்லவோ? — இன்று
தங்கத் தமிழர்கள் தங்க(ள்) இடம்இன்றி
நலிந்தே அலைவதும் நல்லதோ?

- *குறிஞ்சி*

### நலிவதைக் கண்ட பின்னும்...

பல்லவி

துள்ளாத மான்ஏந்தித் துள்ளும் பரமன் உள்ளக்
கள்வா! கதிர்வேலா! கந்தா நல் லூரானே!
(துள்ளாத)

அநுபல்லவி

கள்ளார் மலர்க்குழலி காரிகையில் மையல்மிகுத்
தள்ளாத முதியோனாய்த் தமையனைத் துணைக் கொண்ட
(துள்ளாத)

சரணம்

வெள்ளாவி வைத்ததுணி வேகின்றதுபோலவே
விள்ளாமல் நெஞ்சிந் கொதி மிக்கஎம் தமிழ்மக்கள்
நள்ளார் கொடுமையினால் நலிவதைக் கண்டபின்னும்
உள்ளார்ந்த அமைதியுடன் உலா வருகின்றனையே!
(துள்ளாத)

- *சொக்கன்*

### வரம் நல்கும் வடிவேலனே!

பல்லவி

விடிவின்னும் வரவில்லையா? - தமிழ்க்
குடியாவும் மடிகின்ற துயரங்கள் மிகுவேளை (விடி)

அனுபல்லவி

வடிவேலின் துணைகொண்டு மணித்தோள்கள்
உரங்கண்டு
கடிதேவந் தடியாரைக் காப்பாற்றும் நிலைகாணும் (விடி)

சரணங்கள்

இயல்பான செயலில்லை! இருளன்றி ஒளியில்லை!
இறைவாநீ துணையாகவா! - நெஞ்சில்
என்றென்றும் நிலையாகவா!
புயலோடும், இடியோடும் போராடும் தமிழர்க்குப்
புறங்காணா ஒளியாகவா! -- வெற்றிப்
புகழ்கூட்டும் வழியாகவா!

வண்டாடும் மலர்சூடி நின்றாடும் மயிலேறி
வரம்நல்கும் வடிவேலனே! - நல்லூர்
வதிகின்ற உமைபாலனே!
கண்டாரும் கடைத்தேறக் கருணைசெய் கதிர்காமக்
காலவள்ளி மகிழ்நாதனே! - தெய்வ
மான் கொண்ட மணவாளனே!

- *செ.திருநாவுக்கரசு*
*(நல்லூர்)*


### துன்பங்கள் அணுகாது

ஆறுமுகத்தானை அனுதினமும் கைகூப்பும்
ஆறாத காதல் கொண்ட அடியவர்க்கு - எந்நாளும்
பார் புகழும் வாழ்வு வரும் பதவி வரும் மேதினியில்
சீர், பூத்த, வாழ்வதுவே செப்பு

நாளும் பொழுதும் நல்லூரானைத் தொழுவோர்க்கு
கோளும் கொடுநோயும் குண்டுகளும் கொல்லாது, - வாழுமட்டும்
இன்பங்கள் தான் பெருகி இனிதே வாழ்வுவரும்
துன்பங்கள் அணுகாது காண்.

- *கணேசலிங்கம் அருணா*
*(யாழ். மத்திய கல்லூரி)*


# மனித நாகரிகத்திற்கு முன் நாகரிகத்தின் பின் அை



தனிக்காட்டு ராஜா. விறகுக்காகவும், கால்நடை உணவுக்காகவும், கிளைகள் வெட்டப்பட்டும், மரம் உயிர்வாழ உறுதிபூண்டுள்ளது.



பெரிய இந்திய வனாந்தரத்தில் மணலுடன் போராட்டம். வீதியை மூடி மணல் அலையலையாகப் படிந்துள்ளது. இதை அகற்றுவதில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளார்கள். ஒரு நாள் காற்றிலேயே பாதை முழுதாக மூடப்பட்டு இருந்த இடம் தெரியாமல் மறைந்து போகலாம்.



பற்றீரியங்கள் இல்லாத சூழலில் ஒரு மாடு பிரிந்தழிந்து போகாமல் "மம்மி" (MUMMY)யாக மாறியுள்ளது. நூற்றுக்கணக்கான வருடங்கள் இது இப்படியே இருக்கும். 1950 களில் கொண்டு சென்ற TRUCK வண்டியிலிருந்து விழுந்து இறந்ததால் இதற்கு இக்கதி ஏற்பட்டது.



உயிருள்ள தேன் சாடிகள். தேன் எறும்புகளில் (HONEY ANTS) உயிருள்ள எறும்புகளே சேமிப்புப்பாத்திரங்களாகத் தொழிற்படும். கஷ்டகாலங்களில் சகலதிற்கும் சேமித்த தேன் பயன்படும். 'சாடி' எறும்புகள் ஆதாரத்தைப்பற்றிக்கொண்டு தொங்கிக்கொண்டிருக்கும். ஊட்டப்படும் உணவு தேக்கப்படும்.


## வனமாகல் (FORESTATION)

இயற்கையாக காடுகள் எங்ஙனம் தோன்றின என்பதைப் பார்ப்போம்.

வானிலையழிதலின் (WEATHERING) காரணமாக மண் தோன்றும். இத்தகைய இடங்களில் முதலில் ஈரலுருத்தாவரங்களும், பாசிகளும் தோன்றும்; மேலும் மண்ணும் உக்கலும் தேங்க அங்கு பன்னங்களும் குடியேறும். தொடர்ந்து புல் பூண்டுகளும், பின்னர் செடிகளும் போதிய அளவில் மண் தேங்கிய பின் மரங்களும் தோன்றும். இங்ஙனம் காடுகள் தோன்றுவதற்குப் பல காலம் செல்லும். ஆதி காலம் தொட்டு தொடர்ச்சியாக நிலைத்துள்ள காடுகள் முதலான காடுகள் (PRIMARY FORESTS) எனப்படும். இத்தகைய காடுகளின் வயது ஐந்து கோடி வருடங்களுக்கு மேலாகவும் இருக்கும். இத்தகைய காடுகள் இன்று புவிக்கோளத்தில் மிக அருமை. எஞ்சியுள்ள காடுகள் வளர்முக நாடுகளிலேயே காணப்படுகின்றன. இலங்கையில் சிங்கராச வனம், சிவனொளிபாதமலைப் பிராந்தியக்காடுகள், நுவரேலியா மாவட்டத்தில் ஹோற்றன் சமவெளி (HORTON PLAINS),சந்திர சமவெளி (MOON PLAINS) போன்ற இடங்களில் இத்தகைய காடுகள் உண்டு. இந்த நாடுகளிலும் அரசாங்கங்களின் 'பிஸ்னஸ்' நோக்கம் (BUSINESS MIND) காரணமாக முதலான காடுகள் வெகுவாக அழிக்கப்படுகின்றன; முதலான காடுகளே புவிக்கோளில் இல்லாமற் போய்விடுமோ என்ற அச்சம் சூழலியலாளர்களுக்கு உண்டு. வளர்ந்த நாடுகளில் முதலான காடுகள் இல்லையென்றே சொல்லலாம்.(அருமையாக ஒதுக்குகள் -RESERVES- உண்டு) இங்ஙனம் முதலான காடுகள் இல்லாமற் போனதற்குக் காரணம் மனிதனின் கைங்கரியம்.

காடுகள் அழிக்கப்பட்ட இடங்களில் மீண்டும் காடுகள் தோன்றலாம்; இத்தகைய காடுகள் வழிவந்த காடுகள் (SECONDARY FORESTS) எனப்படும். இந்த வகைக்குரிய காடுகளே இன்று உலகெங்கும் பரவலாக

- குகன் -



பாலைவனச் சீவியம். உணவைப் பெறுவதற்குப் படும்பாடு! உலர்ந்த ஆற்றுப் படுக்கையில் அல்லிக் கிழங்குகளைத் தேடுகின்றார்கள்.

உள்ளன. (நமது நாட்டில் உலர் வலயத்திற்குரிய இத்தகைய காடுகளும் வேகமாக அழிக்கப்படுகின்றன).

சூழலியல் அடிப்படையில் ஒரு நாடு வளமுள்ளதாக இருக்க வேண்டுமானால் நாட்டின் நிலப்பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு காடாக இருக்க வேண்டும். இதை உணர்ந்து பல நாடுகளிலும் மீளவனமாக்கல் (REFORE-STATION) திட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. ஏற்கனவே காடு இருந்து அழிந்த இடத்தில் மேற்கொள்ளப்படும் வனமாக்கல் 'மீளவனமாக்கல்' எனப்படும் ஓர் இடத்தில் புதிதாக வனங்கள... அது வனமாக்கல் (A... எனப்படும். இயற்கையாக... தல்" என்றும் செயற்கை... வதை "வனமாக்கல் எ...

## பாலைவ... (DESERTIFI...

பாலைவனம் இயற்கை... செயற்கையாகவும் கழ... தில் இயற்கைக்காரணிக... அதிகரிப்பு ஏற்பட ... தாவரவர்க்கம் அந்த... அழிந்துபட அல்லது ... குடிபெயர, பிரதேசம் பா... உதாரணமாக சகாராப்பா... தோன்றியதாகக் கருத... காலத்தில் சகாராப் பா... யான பெருமரங்கள... இருந்ததற்கும் அங்கு ம... குகைகளில் அவர்... கொண்டு அங்கு காணப்... குகளுக்கும் (GANE... ஆதாரங்கள் அண்மைக்... துள்ளன.

## பாலை...

ஆயினும் பல இடங்க... மாறியமைக்கு மனித...



மனித முயற்சி மண்ணோடு மண்ணாகக் கலக்கின்றது.



பாலைவனப்பீடை - வெட்டுக்கிளிகள் (LOCUSTS)... வில் இவையும் பெரும்பங்கு வகிக்கும்.

அமைந்திருக்கின்றான். ...டைந்து நகர் (நரக) ... கொண்டபொழுது மரத்தே... தன. அதனால் அண்டிய... மரங்கள் எல்லாம் கண்ட... காட்டின் மீளும் திறனுக்... கள் அகற்றப்படவில்லை... பெருமளவில் அழியநேரி... குடாநாட்டில். பெருமரங்... திமர் என்று மறைவதை...



பாலைவனத்தின் மத்தியில் ஒரு செயற்கைச் சோலைவனம், மனித முயற்சியால் ஏற்பட்டது.




எரிகின்ற, அலைகின்ற நிலத்தில், ஒவ்வொரு மரமும் ஒரு 'சோலை வன'மாகத் தொழிற்பட்டு, அர்க்கும் காற்றுக்கு எதிராக மண்ணைப் பிணித்து வைத்திருக்க உதவும். ஒவ்வொரு மரத்தினதும் அடிவாரத்தைக் கவனிக்க வும்.



குவியும் மணலின் தாக்... சாட்சி. முன்னர் உயரத்... பிக்குக் கீழாக மனித... போக வேண்டியுள்ளது.

# ...ன்னர் காடுகள் தோன்றின; ...வை வனாந்தரங்களாகின!




பாலைவனச்சிவியம். இங்கு நீரைப்பெறுவதற்குப் பெரும்பாடு.

...வனமாக்கலை மேற்கொண்டால் ...க்கல் (AFFORESTATION) ...யற்கையாக நிகழ்வதை "வனமா... செயற்கையாக நிகழ்த்தப்படு... ...க்கல்" என்றும் கொள்ளலாம்.

**...லைவனமாதல் (...SERTIFICATION)**

...ம் இயற்கையாகவும் நிகழலாம்; ...கவும் நிகழலாம். ஒரு பிரதேசத் ...க்காரணிகளின் பயனாக வெப்ப ...ற்பட அப்பிரதேசத்தில் உள்ள ...ம் அழிந்துபட விலங்குகளும் அல்லது வேறு இடங்களுக்குக் ...ரதேசம் பாலைநிலமாக மாறும். ... சகாராப்பாலைவனம் இங்ஙனம் ...கக் கருதப்படுகின்றது. ஒரு ...சகாராப் பாலைவனம் அடர்த்தி ...மரங்களைக்கொண்ட காடாக ... அங்கு மனிதன் வாழ்ந்ததற்கும், ... அவன் கீறிய படங்களைக் ...ங்கு காணப்பட்ட வேட்டை விலங் ... (GAME LIFE). பலதரப்பட்ட ...அண்மைக் காலங்களில் கிடைத்



பாலைவனச் சப்பாத்திக்கள்ளி (GIANT CACTUS). கடும்வரட்சியையும் இது தாங்கிக் கொள்ளும்.

திருக்கலாம்; மரங்களும் காணமற்போய்விடுகின்றனவோ?). இங்ஙனம் வனாந்தரங்கள் தோன்றியமைக்கு எமது முன்னைய நாகரிகங்கள் சிறந்த உதாரணம்; இவையெல்லாம் இன்று பாலைநிலங்களாகக் காட்சிதருகின்றன. உதாரணமாகத் தமிழனின் ஆதிநகரங்களைக் கொண்ட இந்துநதி நாகரிகம் (INDUS VALLEY CIVILIZATIONS) போன்றவற்றைக் கூறலாம். சுமேரிய மற்றும் பின்னர் தோன்றிய பபிலோனிய நாகரிகம் (SUMERIAN / BABYLONIAN CIVILIZATIONS),



அமெரிக்காவில், அரிசோனாவில், அதிமேய்ச்சலால் ஏற்பட்ட வனாந்தரம். காற்றின் திசையை ஓர் இடையன் (COW BOY) சோதிப்பது பொருத்தமான காட்சி. பிரதேசத்தின் சாட்சிக்கு இவரின் முன்னோர்கள்தான் சாட்சி.



ஒரு கிராமம் மணலால் படிப்படியாக மூடப்படுகின்றது.

## ...லைவனங்களின் கதை

...ல இடங்கள் வனாந்தரங்களாக ... மனிதனே மூலகாரணமாக



...OCUSTS). தாவரங்களின் அழி...

...கின்றான். மனிதன் நாகரிகம ... (நரக) வாழக்கையை மேற் ...து மரத்தேவைகளும் அதிகரித் ... அண்டிய காடுகளில் உள்ள ...ாம் கண்டபடி தறிக்கப்பட்டன. ... திறனுக்கு ஈடுகொடுத்து மரங் ...டவில்லை. அதனால் காடுகள் அழியநேரிட்டது. (இன்றும் எமது ...பெருமரங்கள் எல்லாம் திடீர் ...றைவதை நீங்கள் அவதானித்



...யின் தாக்கத்திற்கு தந்திக்கம்பம் ...ர் உயரத்தில் இருந்த தந்திக்கம் ...க மனிதன் இப்போது குனிந்து ...டியுள்ளது.


எகிப்திய நாகரிகம் (EGYPTIAN CIVILIZATION) போன்றவற்றைக் கூறலாம். நமக்கும் அண்மையில் உபவனாந்தரமாகிய (SEMI DESERT) வடமராட்சி கிழக்கு உண்டு. இங்குதான் பண்டைய சிங்கை நகரம் பரந்து விரிந்து கிடந்தது என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன.

வனாந்தரங்கள் தோன்றியபின் அவை வளரும். காற்றினால் மண் அள்ளப்பட்டு அண்டிய இடங்களில் (தூர இடங்களுக்கும் கொண்டு செல்லப்படுவதுண்டு.) வீழ்ந்து பயிர் பச்சையை மூட அவை இறந்துபட, காலப் போக்கில் அப்பிரதேசம் வனாந்தரமாக மாறும்; இங்ஙனம் வனாந்தரம் வளர்ச்சியடையும். வாடைக் காற்றுக்கும், சோளகக்காற்றிற்கும் ஏற்ப வடமராட்சி கிழக்கில் மண்மேடுகள் வடிவம் மாறுவதையும், நிலைமாறுவதையும் நீங்கள் அவதானித்திருக்கலாம். மண்கும்பான், அரியாலை கிழக்கு போன்ற இடங்களில் எங்கிருந்தோ வரும் மண் படிந்து மண்மேடுகள் எழுவதைக் கூட நீங்கள் அவதானித்திருக்கலாம்.(என்னடா! தரிசிக்க முடியாத இடங்களை உதாரணம் தருகின்றாரே என்று திட்ட வேண்டாம்). இந்த மண்படிவினால் சில இடங்களில் பல பிரச்சினைகள் எழுவதுண்டு; றோட்டிலும் நாட்டிலும் படியும் மண்ணை அகற்றிக்கொண்டேயிருக்கவேண்டியிருக்கும். (கட்டட வேலைகளுக்கு மணலின் தேவையும், அதன் தட்டுப்பாடும் அதிகரித்துக்கொண்டே போகின்றது. வனாந்தரங்கள் உள்ள நாடுகள் மணலை ஏற்றுமதி செய்ய ஆரம்பித்தாலும் ஆரம்பிக்கலாம், யார் கண்டார்கள்?)

வனாந்தரங்களில் இருவகை உண்டு; தட்பவெப்ப பிரதேசங்களுக்குரியவை குளிர்



பாலைவனமாதலுக்கு காரணகர்த்தாக்கள் மனிதனின் வளர்ப்பு பிராணிகள். கட்டாக கொப்பையும் வளைத்துப்பிடித்து முடிக்கின்றன. வளைத்துக் கொடுப்பவர் முண்டாசுக்காரர். இத்தகைய தாக்குதலை, இத்தகைய சூழலில் மரம் தாங்குமா?



விறகிற்காக மரம் அடியோடு வெட்டப்படுகின்றது. பிரதேசத்தைக் கவனியுங்கள். அருமையாக நின்ற மரமும் 'குளோஸ்'.

வனாந்தரங்கள் (COLD DESERTS) என்றும், அயனமண்டலப் பிரதேசங்களுக்குரியவை வெப்ப வனாந்தரங்கள் (HOT DESERTS) என்றும் அழைக்கப்படும்.

வனாந்தரங்கள் தோன்றுவதற்கு மந்தை வளர்ப்பும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. பிரதேசம் தாங்க முடியாத அளவிற்கு மந்தைகளை வளர்க்கும் போது அதிமேய்ச்சல் (OVER GRAZING) காரணமாக தாவரங்கள் அழிந்துபட, வனாந்தரங்கள் தோன்றும். அமெரிக்காவில் சில வனாந்தரங்கள் தோன்றியமைக்கு இதுவே காரணம் என்று கண்டறிந்துள்ளார்கள்.

### பாலைவனங்களை மீள வளமாக்கல்

பாலைவனங்களை மீளவளமாக்கலும், பயிர்ச்செய்கைக்குரியவையாக மாற்றுவதும்:-

### அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

பல நாடுகளில் விஞ்ஞானமுறைப்படி பாலை நிலங்களை மீட்க முற்பட்டுள்ளார்கள். காடுகளையோ அல்லது விளைநிலங்களையோ ஏற்படுத்த முற்பட்டுள்ளார்கள்; பாலைவனக் குடியேற்றத் திட்டங்களுமுண்டு.

### பாலைவனச்சூழலியல் (DESERT ECOLOGY)

பாலைவனச் சூழல்களில், அச்சூழலை வெற்றிகண்டு, சில அங்கிகள் அங்குவாழ்கின்றன. இங்ஙனம் ஒரு பாலைவனச் சூழலியலே தோன்றியுள்ளது.

விவரணத்தைத் தொடர்ந்தால் வாசிப்பவருக்கு அலுப்பு ஏற்படலாம் அதனால் படவிளக்கங்களின் மூலம் தொடருவோம்.

உ

திருமண வாழ்த்து

மணமகன்
சின்னத்துரை - தங்கரத்தினம்
தம்பதிகளின்
கனிஷ்ட புதல்வன்
வசந்தகுமார்



மணமகள்
தாவடி வடக்கு
பற்குணம் - பரமேஸ்வரி
தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரி
பராசக்தி

இன்று (27-08-2000) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் இடம்பெறும் திருமணத்தில் இணையும் மணமக்கள் பேறு பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

குடும்பத்தினர், உறவினர்கள்,
நண்பர்கள்.

(77680)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்.குடாநாட்டிலிருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம்24,25 ஆம் திகதிகள் வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு :-

**சங்கானை**

512/150260/A 512/152446/A
512/152446/B 512/152446/C
512/152876/A 512/152898/A
512/154032/A 512/156251/A
512/156251/B

**யாழ்ப்பாணம்**

512/156251/C 512/156251/D
512/156390/A 512/156510/A
512/156510/B 512/156510/C
512/156510/D 512/156510/E
512/156510/F 512/156537/A
512/156537/B 512/156557/A
512/156557/B 512156642/A
512/156653/A 512/159026/A
512/159045/A 512/159134/A

**நல்லூர்**

513/150502/A 513/150502/B
513/150542/A 513/150570 A
513/150570/B 513/150703/A
513/150703/B 513/151794/A
513/151794/B

**சண்டிலிப்பாய்**

513/151895/A 513/151943/A
513/151943/B 513/151945/A
513/151945/B 513/152019/A
513/152121/A 513/152136/A

**உடுவில்**

513/152158/A 513/152211/A
513/155205/A 513/155205/B
513/155213/A

**சங்கானை**

513/123353/A 513/123353/B
513/123353/C 513/123353/D
513/138436/A

**நல்லூர்**

513/146394/A 513/146394/B
513/148298/A 513/148298/B
513/150581/A 513/150583/A
513/150597/A 513/150597/B

**சண்டிலிப்பாய்**

513/150597/C 513/150597/D
513/150747/A 513/151798/A
513/151879/A 513/151879/B
513/151879/C 513/151879/D
513/151967/A 513/151967/B
513/152012/A 513/152012/B
513/152085/A

**தெல்லிப்பழை**

513/152085/B 513/152087/A
513/152087/B 513/152137/A
513/152138/A 513/152200/A
513/152200/B

**உடுவில்**

513/152200/C 513/152214/A
513/152235/A 513/152236/A
513/152236/B 513/152237/A
513/153340/A 513/153341/A
513/155140/A 513/155140/B
513/155140/C 513/155140/D
513/155191/A 513/155191/B
513/155197/A 513/155232/A
513/155232/B 513/155307/A
513/155307/B 513/155341/A
513/155341/B 513/159144/A

## விடைத்தாள் மதிப்பீட்டாளருக்கு

யாழ்ப்பாணம்,ஓக.27

ஜி.சீ.ஈ.உயர்தரப்பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்காக இரண்டாவது கட்ட மதிப்பீட்டாளர்களை கொழும்புக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரையும் நாளை திங்கட்கிழமை காலை எட்டு மணிக்குப் பிந்தாமல் யாழ்.வேம்படி மகளிர் பாடசாலையில் சமுகமளிக்குமாறு யாழ்.வலயக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## நோயாளர் கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,ஓக.27

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் எதிர்வரும் 30 ஆம் திகதி பயணம் செய்ய இருந்த நோயாளர்கள் மற்றும் உதவியாளர்களை செப்ரெம்பர் முதலாம் திகதி காலை 7 மணிக்கு பயண ஏற்பாடுகளுடன் யாழ். போதனா வைத்திய சாலைக்கு சமுகமளிக்குமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(க-139)

## குடிசை அமைக்க பதிவுசெய்தோருக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஓக.27

பச்சிலைப்பள்ளி பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவில் தற்காலிகக் குடிசை அமைப்பதற்குப் பதிவுசெய்த - பனை கிராமிய வங்கியில் கணக்கு வைத்துள்ள - வாடிக்கையாளர்களுக்கான கொடுப்பனவு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கொடிகாமம் ப.நோ.கூ.சங்கத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


## மாணவர்களுக்கான புதிய வெளியீடுகள் வெளிவந்துள்ளன!

- பேராசிரியர் ஜே.கே.பி.ஆரியரத்னா ( இரசாயனவியல் பேராசிரியர், களனிப் பல்கலைக்கழகம்) இரசாயனவியல் பல்தேர்வு வினாக்கள் விடைகளுக்கான விரிவான விளக்கங்களுடன் 1997 இல் இருந்து. (ரூபா 200/-)
- திரு. எஸ்.கே. பிரபாகரன் – கணக்கியல் – கம்பனிக்கணக்கு. (ரூபா 160/-)
- திரு. ஏ. கருணாகரன்–பொருளியல்–சடப்பொருளின் இயல்புகள். (ரூபா 120/-)
- திரு. ஏ.கருணாகரன்–பொருளியல்–சடப்பொருளும் அதிர்ப்பும் (ரூபா 90/-)
- திரு. வே.சண்–பொருளியல் பகுதி II (ரூபா 200/-)
- திரு. எம். மனோகரன் – இந்து நாகரிகம் (ரூபா 120/-)
- திருமதி அம்பிகா தேவி ராஜரட்ணம் – சுற்றாடற்கல்வி தரம் 6 (ரூபா 65/-)
- திருமதி அம்பிகா தேவி ராஜரட்ணம் – விஞ்ஞானம் தரம் 9 (ரூபா 75/-)
- திருமதி விக்கினேஸ்வரி செல்லையாபகம் – தமிழ்மொழி தரம் 7 (ரூபா 55/-)
- திருமதி அம்பிகாதேவி ராஜரட்ணம் – கணிதம் தரம் 6 (ரூபா 80/-)

புத்தகங்கள் தேவைப்படும் மாணவர்கள் காசுக்கட்டளை (Money Order) அனுப்பி வைத்தால் பதிவுத் தபால் மூலம் புத்தகங்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும். (தபால் செலவு இலவசம்)

குளோபல் பப்ளிகேசன்ஸ்,
குளோபல் பிரிண்டர்.(பிரை) லிமிற்.
195, அட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு – 13.
தொலைபேசி: 334557, 478997, 458273
தொலைநகல்: 330588

**Global Publications**
**Global Printer (Pvt.) Ltd.**
195, Wolfendhal Street.
Colombo 13,
Tel: 334557, 478997, 458273
Fax: 330588
e mail: globje@sltnet.lk

யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு:-

*சிவன் மாளிகை,*
166, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 2996 (C/12593)


## மூன்றாம் தவணை ஆரம்பம்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் மூன்றாம் தவணை வகுப்புக்கள் எதிர்வரும் 30ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகும் என கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். இந்தப் பாடசாலை இடம் பெயர்ந்து கோண்டாவிலில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (க)


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCY

Applications are invited by me upto **29th September 2000**, from suitably qualified Applicants for the post of **COMFUTER APPLICATIONS ASSISTANT.**

Salary Scale & Salary Code:
Rs. 6,460-10x110;7x130-8,470/= p.m.,A-08

Qualifications

(I) G.C.E. (Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with credit passes in five subjects including English and Mathematics.

AND

(II)(a) Two years experience in the use of Computer Applications packages.
(b) Suitable Qualification in Computer Applications and at least 06 months on the job training preferable in the University system.

*Note:*

If suitable applicants are not available for recruitment under (II) (a) Applicants Under (II) (b) but without experience may be recruited as Trainee Computer Applications Assistants and placed on a fixed allowance of Rs.5975/= p.m On completion of one year, could be placed on the salary scale of A-08.

**Age:**
Not more than 45 years.

**Selection:**
By Aptitude test and Interview.

Application forms and particulars for the above post should be obtained from the office of the Assistant Registrar/Establishments of this University on a Payment of Rs.20/= for each Application Form at the People's Bank, University of Jaffna or at the Shroff's Counter of this University. Thouse who wish to obtain the forms and details by post should send a Money Order/Postal Order to the value of Rs. 20/= in favour of the Bursar, University of Jaffna. together with a self addressed Rs. 3.50 stamped envelope of 23x10cm. in size. Application sent on prescribed forms will only be accepted.

Applicants from Government Department, State Corporations and Statutory Bodies should apply through their appointing authorities. Age limit is not applicable who are in service.

Applications received after the closing date and the applications on which the particulars are stated illegibly will be rejected.

***REGISTRAR***
*University Of Jaffna,*
*Jaffna.*
2000-08-24 (C/12699)



We Serve

## ஊரெழுவில்.....

உரும்பிராய் லயன்ஸ் கழகம் நடத்தும்

## இலவச மருத்துவ முகாம்

இடம்:- கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம், ஊரெழு. பலாலி வீதி, ஊரெழுப் பிள்ளையார் கோயில் தெற்கு வீதி

காலம்:- இன்று (27-08-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை.

மேற்படி முகாமில் கண் பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை, நெஞ்சு நோய்களுக்கான பரிசோதனை என்பன இலவசமாக மேற்கொள்ளப்படும்.

*கண்பரிசோதனை*

**லயன் எஸ்.எம்.பெர்னாண்டோ *M.J.F.***

வைத்திய நிபுணர்களும், மருத்துவபீட மாணவர்களும் இந்தப் பரிசோதனைகளை நடத்துவர்.

அனைவரும் வருக! பயன் பெறுக.

*(புதிய நோயாளர்களின் வரவு விரும்பத்தக்கது)*

லயன் அ.த.க. கிருஷ்ணராசா, செயலாளர். (77713) லயன் வ. ஆறுமுகம், தலைவர்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 19 - 04 - 1912



ஐங்கரன் அடியில் 29 - 07 - 2000

### திருமதி குமாரசாமி சிவபாக்கியம்
(சாமியம்மா)

29-07-2000 அன்று இறைவனடி சேர்ந்த அமரர் சிவபாக்கியத்தின் 31ஆவது நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும் (28-08-2000) திங்கட்கிழமை அன்று புளியங்கூடல் தெற்கில் உள்ள அன்னாரது சகோதரியின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர் அனைவரையும் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

*புளியங்கூடல் தெற்கு,*
*ஊர்காவற்றுறை.* (77711)

**சகோதரிகள், பெறாமக்கள், மருமக்கள்.**

## நினைவில் நீங்கா ஓராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 20 – 10 – 1925



இறைவன் அடியில் 07 – 09 – 1999

### அமரர் அரியகுட்டி சுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற ஓவசியர், யாழ்.மாநகரசபை)

திதி : 27–08–2000

அன்பின் ஒளி வடிவாய் - எங்கள்
இல்லமெங்கும் நிறைந்த பாசச்சுடரே!
ஆண்டொன்று மறைந்திடினும்
ஆறிடுமோ எம் துயரம்!

உங்கள் ஆத்ம சாந்திக்காக மஞ்சவனப்பதி முருகனை மன்றாடுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் வாடும்
**அன்பு மனைவி, மகள், மகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை, உற்றார், உறவினர்.**

*தேவி வாசா*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (77604)

# சமாதான முயற்சியில் புலிகளுக்கு தற்போது நாட்டம் இல்லை!

## அமெரிக்கக் குழுவிடம் கதிர்காமர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 27

உத்தேச அரசமைப்புச் சீர்திருத்தத்தினை விடுதலைப் புலிகள் ஆராய்ந்து பார்க்காது நிராகரித்துள்ளனர். சமாதான முயற்சிகளில் புலிகளுக்கு தற்போது நாட்டம் இல்லாத நிலையே காணப்படுகின்றது. வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டமைச்சின் அழைப்பை ஏற்று மூன்றுநாள் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த அமெரிக்கக் காங்கிரஸ் தூதுக்குழுவினரை சந்தித்து பேசியபோதே அமைச்சர் கதிர்காமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க காங்கிரஸ் குழுவைச் சந்தித்த அமைச்சர் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து எடுத்துக் கூறினார். அரசமைப்புச்சீர்திருத்த யோசனைகள், மனித உரிமைகள், தென்பகுதியில் 1980 ஆம் ஆண்டளவில் கிளர்ச்சிக் காலத்தில் இடம்பெற்ற மனித உரிமைப் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியும் அரசாங்கமும் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சர் கதிர்காமர் விளக்கிக்கூறியதாக வெளிநாட்டமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச அரசமைப்பு யோசனைகளை புலிகள் ஆராயாமல் ஒரேயடியாக நிராகரித்துள்ளனர். சமாதான முயற்சியில் நோர்வேயின் பங்களிப்பினை விளக்கிய அமைச்சர் சமாதான முயற்சியில் புலிகளுக்கு நாட்டம் இல்லை என்றும் காங்கிரஸ் குழுவிடம் கூறியுள்ளார்.

வடபகுதிமக்களுக்கு அனுப்பிவைக்கப்படும் மருந்து, உணவுப்பொருள்களின் பெரும் பகுதியை புலிகள் அபகரிப்பதாகவும் அமைச்சர் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார்.

மேற்படி குழுவுடனான சந்திப்பின்போது அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது நிலவும் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையக்கூடிய புதிய அரசியல் சீர்திருத்தச் சட்டமூலத்தை விடுதலைப் புலிகள் நிராகரித்துவிட்டதாகவே கருதவேண்டியுள்ளது.

மேலும் புதிய அரசியல் சீர்திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் விடுதலைப் புலிகளுக்கு வழங்கிவரும் பெரும் நிதியுதவிகளை ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்கள் நிறுத்திக் கொள்வர்.

இதேநேரம் வடக்கு—கிழக்கில் யுத்தம் நடைபெற்று வருகின்ற போதிலும் அங்கு வாழும் சகல மக்களுக்கும் தேவையான உணவுப் பொருள்கள், மருந்துவகைகள் மற்றும அத்தியாவசியப் பொருள்கள் தொடர்ந்தும் வழங்கப்படுகின்றன.

அத்துடன் தற்போது வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்படும் உணவுப் பொருள்கள் மற்றும் மருந்து வகைகளில் ஒரு பகுதியை விடுதலைப் புலிகள் எடுத்துவிடுகின்ற போதிலும் எவ்வித இடைநிறுத்தமும் இன்றி அவை மக்களின் நன்மை கருதித் தொடர்ந்தும் அனுப்பப்படுகின்றன.

இது இவ்வாறிருக்க இலங்கையில் நிலவும் உயர்ந்த வாழ்க்கைத் தரம் தொடர்பாகவும், சமாதானத்தை ஏற்படுத்தும் பொருட்டு ஆளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி எடுத்து வரும் முயற்சிகள் தொடர்பாகவும் தாம் திருப்தி கொண்டிருப்பதுடன் வடக்கு—கிழக்குப் பிரதேசங்களுக்குத்தட்டுப்பாடில்லாமல் உணவு விநியோகம் நடைபெறுவதையிட்டுப் பெரு மகிழ்ச்சி அடைந்திருப்பதாக அமெரிக்கத் தூதுவர் குழு தெரிவித்துள்ளது.

(ஐ-6)

# தேர்தல் ஏற்பாடு குறித்து கொழும்பில் கலந்துரையாடல்

கொழும்பு, ஓக. 27

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் குறித்து தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்களை தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க கடந்த வியாழனன்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

தேர்தலை நியாயமாகவும் நேர்மையாகவும் நடத்துவது குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

அதிகாரிகள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து எடுத்துக்கூறியபோது இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆணையாளர் தெரிவித்தார்.

நியமனப்பத்திரங்களை ஏற்றுக் கொள்வதில் தற்போது அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. தேர்தல் ஆணையாளர் கட்சிப் பிரதிநிதிகளை அடிக்கடி சந்தித்துப் பிரச்சினைகளைக் கலந்துரையாடுவார் என்று தேர்தல் செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வது பற்றியும் முடிவு செய்யப்பட்டது.

வாக்காளர்களின் எண்ணிக்கை கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பதிவு செய்யப்பட்டதை விட அதிகரித்துள்ளது.

இதனால் நாடு முழுவதும் 9 ஆயிரத்து 947 வாக்குச் சாவடிகள் அமைக்கப்படும்.

தேர்தல் ஆணையாளர் தபால்மா அதிபரையும் தபால் திணைக்கள உயர் அதிகாரிகளையும் சந்தித்து பேசியுள்ளார்.

வாக்காளர் அட்டைகள் ஏனைய ஆவணங்களை உரிய காலத்தில் விநியோகிப்பது தொடர்பான ஆயத்தங்கள் பற்றியும் இணக்கம் காணப்பட்டது. (ஐ-9)

# கசிப்பு வேட்டையின் போது 17 பேர் கைதாகி நீதிமன்றில்

யாழ்ப்பாணம், ஓக. 27

கந்தரோடை, குப்பிளான், ஊரெழு மற்றும் ஏழாலைப் பகுதிகளில் நடத்தப்பட்ட கசிப்பு வேட்டையின் போது கடந்த 3 வாரங்களில் 17 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

சுன்னாகம் மதுவரிநிலையப் பொறுப்பதிகாரி ராஜ்மோகன் தலைமையில் சென்ற குழுவினரே மேற்படி பகுதிகளில் கசிப்பு வேட்டையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கசிப்பு விற்பனை மற்றும் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டுகளின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

17 பேரிடம் இருந்தும் மொத்தம் 40 ஆயிரம் ரூபா குற்றப்பணம் நீதிமன்றத்தால் அறவிடப்பட்டதுடன் கைப்பற்றப்பட்ட கசிப்பும் அழிக்கப்பட்டது.

(ஐ-9)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 27 — 04 — 1952

உதிர்வு 19 — 08 — 1998

நீர்வேலி -- அச்சுவேலி

### திருமதி சரஸ்வதி சிவகுருநாதன்

திதி: 27-08-2000

ஆண்டிரண்டான தம்மா!
மறக்கவில்லை உங்கள் முக .
வருடம் இரண்டு சென்றுவிட்டதம்மா!
தீரவில்லை எம் துயரம்.
பெற்ற எம்மைத் தவிக்கவிட்டு
பிரிந்து நீங்கள் சென்றதேனோ?
மலர்ந்த உங்கள் முகத்தைக்காண
மனம் துடிக்கும் மக்கள், பேரப்பிள்ளைகளும்
கூட வருந்தி அழுகின்றார்கள்.
நெஞ்சை விட்டு நீங்கவில்லை
நிதமும் உங்கள் நினைவலைகள்.

பிரிவால் துயருறும்

**கணவன், மக்கள், மருமகன், பேரப்பிள்ளைகள், உறவினர்.**

கோயில் வீதி,
கொக்குவில்.

(77616)


# டக்ளஸ் பீரிஸ் பட்டலந்தவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்

முன்னாள் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் டக்ளஸ் பீரிஸ், பட்டலந்த கொலைக் களங்கள் பற்றி விசாரணை நடத்திவரும் சி. ஐ. டி. அதிகாரிகளுடன் பட்டலந்த இராணுவ முகாமின் சித்திரவதைக் கூடத்துக்கு நேற்று முன்தினம் அழைத்துச் செல்லப்பட்டார்.

பட்டலந்த வீடமைப்புத் தொகுதிக்குச் சென்றபோது எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க உபயோகித்த வீட்டை டக்ளஸ் பீரிஸ் அடையாளம் காட்டினார்.

தடிப்பிரியந்த என்று அழைக்கப்படும் சி. எச். சந்திரபிரேம மற்றும் தர்மசிறி ஆகியோர் கொடூர செயல்களைப் புரிவதற்கு பயன்படுத்திய வீடுகளையும் அவர் காட்டினார்.

இந்த வீடுகள் களனி பிரதேச செயலருக்குச் சொந்தமான பழைய தங்குமிட விடுதிக்குப் பின்னால் அமைந்திருக்கின்றன. (இ-5-10)

# அம்மன் வீதி, சிவன் வீதி திருத்தவேலை ஆரம்பம்

நல்லூர், ஓக. 27

யாழ்ப்பாணம் அம்மன் வீதித்திருத்த வேலைகள் நீண்ட காலத்தின் பின் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேசமயம் -

திருநெல்வேலி சிவன் வீதி திருத்தப் பணிகளும் விரைவில் இடம்பெறவுள்ளன. இதற்குத் தேவையான கற்கள் அங்கு பறிக்கப்பட்டுள்ளன.

திருநெல்வேலி சிவன் வீதி மற்றும் நல்லூர் சட்டநாதர் வீதி வழியான போக்குவரத்து அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அரச ஊழியர்கள் இப்பாதையைப் பயன்படுத்துவதைக் காணக்கூடியதாகவுள்ளது. வாகனப் போக்குவரத்தும் இந்த வீதியில் முன்னெப்போதும் இருந்திராதவகையில் அதிகரித்துள்ளது. எனினும் இவ்விரு வீதிகளும் படுமோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றன.

முன்னுரிமை அடிப்படையிலும் மிகவேகமாகவும் - மழைகாலத்துக்கு முன்பாக— இந்த வீதிகள் திருத்தப்படவேண்டும் என்று பாதசாரிகள் கோருகின்றனர்.

(ஐ-103)

# சேதமடைந்த வள்ளங்களைக் கரைக்குக் கொண்டு வந்தனர்

குருநகர், ஓக. 27

குடாக்கடலில் சேதமடைந்த நிலையிலுள்ள வள்ளங்களைக் கரைக்குக் கொண்டுவரப் படையினர் அனுமதி வழங்கியதை அடுத்துக் குருநகர் இறங்குதுறைக்குச் சமீபமாகச் சேதமடைந்த நிலையில் இருந்த வள்ளங்கள் உரியவர்களால் தரைப் பகுதிக்கு எடுத்துவரப்பட்டன.

குடாக்கடல் பகுதியில் மீன்பிடிக்கப் படையினரால் தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ள எல்லைக்குள் உள்ள வள்ளங்களே மீனவர்களால் மீட்கப்பட்டன. அனுமதி வழங்கப்படாமல் உள்ள கடற்பகுதியில் உள்ள வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் எதுவும் மீட்கப்படவில்லை என மீனவர்கள் தெரிவித்தனர்.

(இ-51)

# கொலைகள் தொடர்ந்தால் நாடு சுடு காடாகி விடும்

## மகாநாயக்கர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 27

தேர்தல் ஆரம்பமாவதற்கு முன்னரே கொலைக்களம் தொடங்கிவிட்டது. இப்படியான கொலைகள் தொடர்ந்தால் நாடு சுடுகாடாகிவிடும். எனவே வன்முறைகள் அற்ற நிலையில் தலைவர்களை மக்கள் தெரிவுசெய்யச் சந்தர்ப்பம் வழங்கவேண்டும்.

நான்கு பீடங்களின் மகாநாயக்கர்களும் மேற்கண்டவாறு கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை மேற்படி பீடாதிபதிகள் ஒன்றாகக் கூடி தேர்தலால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து ஆராய்ந்து மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர்கள் விடுத்துள்ள பகிரங்க வேண்டுகோளில் தெரிவித்துள்ளதாவது:-

தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டு நியமனப்பத்திரங்கூடக் கையளிக்கப்படாத நிலையில் கொலைக்களமாக நாடு மாறியுள்ளது. இந்த நிலை தொடர்ந்தால் நாடு சுடுகாடாகிவிடும்

வன்முறையற்ற நிலையில் தங்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மக்களுக்கு வழங்கப்படவேண்டும்.

வன்முறைகள் தொடர்பாக ஒரு கட்சியை மட்டும் குறை கூறக்கூடாது. சகல அரசியல் கட்சிகளும் இதற்குப் பதில் கூற வேண்டும்.

சுதந்திரமான தேர்தலை நடத்துவோம் என்று அரசாங்கத்தரப்பினர் கூறுகின்றனர். ஆனால் நடப்பதோ வேறு. இந்த நிலைமை தொடர அனுமதிக்கக் கூடாது—

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# முறைசாராக் கல்வி கற்கை நெறிகள்

யாழ்ப்பாணம், ஓக. 27

தென்மராட்சி கல்வி வலயத்தினால் முறைசாராக கல்விப் பாட நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன இந்தப் பாடநெறிகளைப் பயில விரும்புவோர் நாளை திங்கட்கிழமை பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

ஆங்கிலம், தமிழ் சுருக்கெழுத்து. தட்டெழுத்து பாடநெறிகளை பயில விரும்புவோர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இயங்கும் உசன் இராமநாதன் ம வி. அதிபரை பிற்பகல் 3 மணிக்கும் —

தட்டச்சு இயந்திரம் திருத்துதல், சிகையலங்காரமும் ஒப்பனையும் பாடநெறிகளைப் பயில விரும்புவோர் ரலன்ற் கல்வி நிலையத்தில் இயங்கும் சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபரை காலை 10 மணிக்கும் —

உடையமைத்தல் பாடநெறியை பயில விரும்புவோர் யார்க்கரு விநாயகர் வித்தியாலயத்தில் இயங்கும் மீசாலை வீரசிங்கம் ம. வி. அதிபரை பிற்பகல் 3 மணிக்கும் —

தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

'விநாயகர்பதி', கரவெட்டி மத்தியைச் சேர்ந்த விநாயகம் சரஸ்வதி, கோமதி விநாயகம் என்பவர்களுடைய் தேசிய, விசேட அ.அட்டைகள் அடங்கிய மணிப்பேர்ஸ் ஒன்று நெல்லியடிக்கும் அரசடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நெல்லியடி மொடேண் ஸ்ரோர்ஸில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (77695)

பற்றிமா வீதி, பண்டத்தரிப்பைச் சேர்ந்த நடராஜா வசந்தமலர் என்பவரது விசேட அ.அ., தேசிய அ.அ என்பன யாழ். போதனா வைத்தியசாலையில் 25-08-2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி முகவரியில் அல்லது பண்டத்தரிப்பு தபாற்கந்தோரில் ஒப்படைத்து உதவவும். (77697)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

பூநாறி மரத்தடிக்கும் அரசடிக்கும் இடையில் பெண்களுக்கு உரித்தான கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. பொருளுக்குச் சொந்தமானவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி உடன் பெற்றுக்கொள்ளவும். தொடர்புகளுக்கு: கோபிகா அழகு மாடம், கொக்குவில் சந்தி, கொக்குவில். (C/12707)

## படிவம்

தேசிய கல்விக் கல்லூரிக்கான படிவம் வந்துள்ளது. விலை ரூபா 5/- கல்வி நிர்வாக சேவை III ஆம் படிவம் விலை ரூபா 2/- தபாலில் பெறுவதாயின் தபாற் செலவு சேர்த்து அனுப்பவும். தொடர்பு: நாயகபாலன், மானிப்பாய். (77690)

## மாந்திரீகர் தேவை

சகல மாந்திரீகங்களும் செய்யக்கூடிய திறமையான மாந்திரீகர் உடன் தேவை. கட்டண விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல.1082,மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (77441)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 33 வயது லண்டன் வதிவிட அந்தஸ்து பெற்ற B.Sc Electronic பட்டம் பெற்று கொம்பியூட்டர் துறையில் வேலை பார்க்கும் ஆயிலியம் நட்சத்திரம் பாவம் குறைந்த செவ்வாய் தோஷமுள்ள மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. மணமகனின் பெற்றோர் கனடாவில் வசிப்பதால், கனடாவில் பெண் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு: விளம்பர இல.1085,மே/பா உதயன், யாழ்ப்பாணம். (77696)

## விற்பனைக்கு

திருமந்திரம், திருவாசகம், திருக்குறள், திருமுறைத் திரட்டு, திருப்புகழ், திருஅருட்பா இன்னும் தெய்வீக நூல்கள் பல இருக்கின்றன. தொடர்பு 135, சிவன் கோயில் முன்பாக, நல்லூர், யாழ்ப்பாணம். (77665)

குறோட்டன் செடிகள் விற்பனைக்கு உண்டு. 40ரூபாவில் இருந்து 25 ரூபா வரை. தொடர்பு: ஞா.செந்தூரன், அபிராமி மகால், அச்சுவேலி தெற்கு, நாவற்காடு, அச்சுவேலி. (77676)


அழகான ஆண், பெண் பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பற்றி மாதா கோயில் வீதி, பண்டத்தரிப்பு (தியான இல்லம் அருகில்) (77683)

## வீடு விற்பனைக்கு

மூளாயலை லேன், மானிப்பாயில் அமைந்துள்ள கல்வீடும் நாலு பரப்புக் (பயன்தரும் மரங்கள் உள்ள) காணியும் உடன் விற்பனைக்குண்டு. மாலை 3மணிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளவும். (77709)

## இறைச்சிக் கோழி

சேவல், கல்பேட் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (37644)



அண்மையில் 'கலாபூஷணம்' விருது பெற்ற இணுவில் நாதஸ்வர மேதை கே.ஆர்.சுந்தரமூர்த்தியின் சேவையைப் பாராட்டி இணுவில் பொதுமக்கள் சார்பில் காரைக்கால் சிவன் தேவஸ்தானத்தில் எடுக்கப்பட்ட விழாவில், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி சி.சிவலிங்கராசா சுந்தரமூர்த்திக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், திரு செ.மதியாபரணம் (வளர்மதி) பொற்பதக்கம் சூட்டி வாழ்த்துவதையும் படங்களில் காணலாம். (ஐ)

## மாகாண மட்ட கண்காட்சிப்போட்டி

யாழ்ப்பாணம்,ஓக.27

வடக்கு-கிழக்கு மாகாண தொழிற்றுறைத்திணைக்கள மாகாண மட்ட கண்காட்சிப் போட்டியில் யாழ். மாவட்ட உற்பத்தியாளர்களும் கலந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப் போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் தமது உற்பத்திப் பொருள்களை நாளை திங்கட்கிழமை கந்தர்மடம் பலாலி வீதியிலுள்ள நெசவு நிலையப் பொறுப்பதிகாரியிடமோ அல்லது எதிர்வரும் இரண்டாம் திகதி யாழ். செயலகத்திலுள்ளதொழில்துறைத் திணைக்கள மாவட்ட அலுவலகத்திலோ ஒப்படைக்குமாறு முகாமைத்துவ உதவியாளர் கேட்டுள்ளார்.

இந்தக் கண்காட்சிப் போட்டி செப்ரெம்பர் மாதம் 9ஆம், 10ஆம், 11ஆம திகதிகளில் திருகோணமலை விபுலானந்தா கல்லூரியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (க)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்

திரு. ச. திருக்குமாரின் துணைவியார்

### திருமதி நளினி திருக்குமார்

அவர்களின் மறைவையிட்டு நாம் ஆழ்ந்த துயரம் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

(77723)


## மொறட்டுவ பல்கலைக்கழகத்துக்கு தெரிவான 13 பேரின் விவரங்கள்

கொழும்பு,ஓக.27

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் 2000-2001 ஆம் கல்வி ஆண்டு என்.டி. ரி பாடநெறிக்குத் தெரிவான வடபகுதி மாணவர்கள் 13 பேரின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவர்களுக்கான அனுமதிஅட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் நன்மை கருதி மொறட்டுவ பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியமன்றம் அவர்களின் பெயர் விவரங்களை உதயனுக்கு அனுப்பி வைத்துள்ளது.

அவை வருமாறு:-

★ ரி.செந்தூரன் - ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.

★ எம்.சிவசேயன் - மூனமாலை ஒழுங்கை, மானிப்பாய்.

★ எம். துஷ்யந்தன் - 155A,கே.கே.எஸ். றோட், கொக்குவில்.

★ எஸ்.கோபிநாத் - அளவெட்டி கிழக்கு.

★ ரி.ஜெயசேகரன்-பிள்ளையார் கோயிலடி ,உடுவில் தெற்கு.

★ ரி.மதியழகன் - நீராவில் பூனக்கோவி, கிளிநொச்சி.

★ எம்.கருணாகரன் - 'மதுர கோட்டம்' ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

★ எஸ்.லலித்குமாரன் - கல்லூரி வீதி, சங்கத்தானை.

★ சி.அனுராஜ் - 'ராஜ்பவன்' பொன்னாலை.

★ எஸ்.அசோக் -2ஆவது மைல் கல், முரசுமோட்டை, கிளிநொச்சி.

★ எஸ்.சிவகரன் - பிரதான வீதி, ஒட்டுசுட்டான்.

★ எஸ்.லவன் - தண்ணீரூற்று, முள்ளியவளை.

★ ஏ.தர்சினி குமாரசாமி,மே/பா -குமரன் ஸ்ரோர்ஸ், புதுக்குடியிருப்பு. (ஐ-6)


## அழியா நினைவில்

### கார்த்திகேசு மாணிக்கவாசகர்

(முன்னாள் அரச அதிபர்)

குடாநாட்டு மக்கள் போர் நெருக்கடிகளால் பெரிதும் அவலங்களைச் சந்தித்திருந்த ஒரு கால கட்டத்தில் தனது அரச நிர்வாகப் பதவிகள் மூலம் மக்களோடு மக்களாக நின்று மக்கள் பணி புரிந்த சேவைச் செம்மல்

### கார்த்திகேசு மாணிக்கவாசகர்

அவர்களுக்கு எங்கள் இதய அஞ்சலிகள். செம்மனச் செல்வரான அவரது நற்பண்புகளும் அவர் தம் சேவையும் என்றும் அழியா நினைவுக்குரியவை.

அன்னாரின் திடீர் மறைவால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி க. சிவசிதம்பரம்
செயலாளர்,
பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு – கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

(C/12709)


## நல்லூர் தேர்த் திருவிழாவை முன்னிட்டு பாத யாத்திரை

ஆத்மஜோதி முத்தையா ஞாபகார்த்த சபையின் ஏற்பாட்டிலான நல்லூர்க்கந்தன் தேர் பாதயாத்திரை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4மணிக்கு ஏழாலை இலந்தைக்கட்டி ஸ்ரீ பாதாள ஞானவைரவர் ஆலயத்திலிருந்து சிவத்திரு சிவ.சண்முகவடிவேல் தலைமையில் ஆரம்பமாகும்.

பாத யாத்திரை ஏழாலை, குப்பிளான் ஊடாக புன்னாலைக்கட்டுவன் தெற்கு, பலாலி-யாழ்ப்பாணம் பிரதான வீதி வழியாக உரும்பிராய் கோண்டாவில் சந்திப்பிள்ளையார் ஆலயத்தை இன்றிரவு 7 மணிக்கு வந்தடையும். அங்கிருந்து நாளை திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்கு யாத்திரை ஆரம்பமாகி திருநெல்வேலி சிவன்கோயில் வீதி வழியாக நல்லூர்க் கந்தன் ஆலயத் தேர்முட்டி இருப்பிடத்தை வந்தடைந்து தேருடன் வீதியுலாவில் கலந்துகொள்ளும். (க)

## சம்பளக்கொடுப்பனவு

மிருசுவில் றோ.க. வித்தியாலய ஆசிரியர்களின் ஜூலை மாதச் சம்பளக் கொடுப்பனவுகள் நாளை திங்கட்கிழமை காலை 10.30 மணி முதல் 11.30 மணிவரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இயங்கும் தென்மராட்சிக்கல்வி வலய உபஅலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என அதிபர் தெரிவித்துள்ளார். (க)

★ ★ ★

பளை மத்திய கல்லூரி ஆசிரியர்களுக்கான ஜூலை மாதச் சம்பளக் கொடுப்பனவுகள் நாளை திங்கட்கிழமை காலை 9மணிமுதல் 12 மணிவரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும்-

எதிர்வரும் 30ஆம் திகதி காலை 9மணி முதல் 10மணி வரை மருதனார்மடத்தில் இயங்கும் தென்மராட்சிக் கல்வி வலயத்திலும் வழங்கப்படவுள்ளன. (க)

★ ★ ★

சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் தமது ஜூலை மாதச் சம்பளக் காசோலைகளை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 2மணிக்கு முன்னர் கோவிற்சந்தைக்கு அருகிலுள்ள ரலன்ற் கல்வி நிறுவனத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (க)

## தப்பியோடிய 39படையினர் கைது

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களைக் கைதுசெய்வதற்காக எல்பிட்டிய பொலீஸ் பிரிவில் நடத்தப்பட்ட தேடுதலில் 39 பேர் கைது செய்யப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

படையில் இருந்து தப்பியோடிய மேலும் 80 பேர் இப்பகுதியில் கைது செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கைதானோர் பூஸா படை முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஜ)


MOBILE NET MCS COMPUTER SERVICES

# MERIT SCHEME

ஐ.நா. அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 2 வருட காலமாக அரச திணைக்களங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும் பங்காற்றும் UNDP கணனிப் பயிற்சிக் குழுவினர் நவீன தொழில்நுட்ப யுகத்திற்கு மாணவர்களை தயாராக்கும் வகையில் தமது சேவையை மேலும் விஸ்தரித்துள்ளார்கள்.

போட்டிப் பரீட்சை (பொதுஅறிவு,நுண்ணறிவு) மூலம்

1000 FREE SCHOL

- Dip. in Desktop Publishing
- Dip. in Media Technology
- Advanced Dip. in Programming
- Advanced Dip. in Information Technology
- Dip. in MS Office
- Dip. in Hardware & Networking

விண்ணப்ப முடிவுத் திகதி 31.08.2K

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து ரூபா 150 காசுக் கட்டளையுடன்

Director, MCS
324, Palaly Road, Jaffna
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

பெயர் : ..........
முகவரி : ..........
பிறந்த திகதி : ..........
காசுக் கட்டளை இல : ..........
பணம் பெறும் நிலையம் : Post Office, Jaffna.
கல்வித் தகமை : O.L : ☐ A.L : ☐

# தீர்வு ஒன்றுக்கான பாதையை அரசு உருவாக்கிவிட்டுள்ளது

## செய்தியாளர் மாநாட்டில் வரதராஜப்பெருமாள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓகஸ்.27

ஜனாதிபதி சந்திரிகாவின் தீர்வுத் திட்டம் தமிழ் மக்களின் விருப்பத்தை முழுமையாக நிறைவேற்றக் கூடியது அல்ல. எனினும் நீண்ட கால செயல்முறையில் - அரசியல் பரிமாணத்தில் - தீர்வு ஒன்றுக்கு வழியைத் திறந்து விடக்கூடிய வாய்ப்பை இந்தத் தீர்வுத் திட்டம் ஏற்படுத்தியுள்ளது. எதிர்வரும் தேர்தலில் மக்கள் ஆணையைப் பெற்றுத் தீர்வுத் திட்டத்தை நிறைவேற்றப் போவதாக ஜனாதிபதி உறுதி கூறியுள்ளார். பேரினவாதச் சக்திகளின் எதிர்ப்புக்கு மத்தியில் அவர் முன் எடுக்கும் முயற்சிக்குக் கைகொடுக்க முன்வரவேண்டியது அவசியமாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதல்வரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) தலைவருமான அ.வரதராஜப்பெருமாள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள அவர் நேற்றுப் பிற்பகல் யாழ். நகரில் உள்ள தமது அமைப்பின் அலுவலகத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். அந்தச் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்ட விவரங்களைத் தெரிவித்தார்.

இந்த அமைப்பைச் சேர்ந்த த.சுபத்திரன், எஸ்.மோகன் ஆகியோர் செய்தியாளர் மாநாட்டில் உடனிருந்தனர்.

செய்தியாளர் மாநாட்டில் வரதராஜப்பெருமாள் மேலும் கூறியதாவது:-

நாம் பெரியளவில் வாக்குறுதிகளை விட விரும்பவில்லை. கடந்த சில வருடங்களாக மக்கள் எம்மை நன்கு அறிவர். அதற்கு முதல் பத்து வருடங்களுக்கு முன்னர் மாகாணசபை ஊடாகவும் மக்கள் எம்மை அறிவர். தமிழர் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய இயக்கம் என்பதையும் மக்கள் அறிவர்.

கடந்த 1972ஆம் ஆண்டு முதல தமிழ் மக்களின் அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளில் ஈடுபட்டுப் பல்வேறுபட்ட அரசியல் அனுபவங்கள் ஊடாகவும் வந்துள்ளோம்.

தமிழ் மக்களின் விடுதலைக்காக ஆரம்பிக்கப்பட்ட இயக்கங்களுக்கு இடையில் நிலவிய நல்லுறவு 82ஆம் ஆண்டு ரெலோ அமைப்பை விடுதலைப் புலிகள் தாக்கியதால் முறிவடைந்தது. அதன் பின்னர் ஆயுதம் தாங்கிய சுதந்திர வேட்கை கொண்ட போராட்டம் முடிவுக்கு வந்தது.

எதிர்காலம் என்ன என்று தெரியாத நிலையில் இலங்கை-இந்திய ஒப்பந்தம் வந்தது. அதன் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைத் திட்டம் பல்வேறு காரணங்களால் சாத்தியமாகவில்லை.

அதன் பின்னர் அரசியல் தீர்வுத் திட்டத்தை எதிர்பார்த்தோம். ஜனாதிபதி சந்திரிகா பதவியேற்றுத் தீர்வு யோசனையை முன்வைத்துள்ளார். அந்தத் தீர்வு யோசனைகளை முன்னெடுக்கப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

கடந்த நாடாளுமன்றத்தில் இந்த யோசனைகள் நிறைவேற்றப்படாதது துர்ப்பாக்கியமே.

அந்த யோசனைகள் தமிழரின் விருப்பத்தை முழுமையாக நிறைவேற்றவில்லை என்பது உண்மைதான். எனினும் எதிர்காலத்தில அரசியல் தீர்வு வளர்ச்சிபெற வழிதிறந்து விடப்பட்டுள்ளது.

அடுத்த நாடாளுமன்றத்தில் இந்த யோசனையை நிறைவேற்ற மக்கள் ஆணையைச் சந்திரிகா கோரியுள்ளார். அதற்காகப் பிரசாரம் செய்கிறார். அவர் தேர்தலில வென்று இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவார் என எதிர்பார்க்கின்றோம்.

இந்த விடயத்தில் நாம் அவருக்குக் கைகொடுத்து ஊக்கம் கொடுக்க வேண்டியது அவசியம்.

தமிழ்ப் பிரதிநிதிகளைப் பொறுத்த வரையில் இரு வகையான கடமைகள் உள்ளன. மக்களின் அன்றாடப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது ஒன்று. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு போராடுவது மற்றையது ஆகும். இந்த இரு விடயங்களிலும் உறுதியாகவும், நிதானமாகவும் காரியம் ஆற்றக்கூடிய பொருத்தமானவர்களைத் தெரிவு செய்யவேண்டும். இந்த அடிப்படையில் தேர்தலில் போட்டியிட வந்துள்ளோம்.

1988 மாகாணசபைத் தேர்தல், 89 நாடாளுமன்றத் தேர்தல் ஆகியவற்றின்போது இருந்த பிரச்சினை வேறு. இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினை வேறு. அன்று தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய தீர்வை நோக்கியதாக அந்தத் தேர்தல்கள் அமைந்தன.

ஆனால் இன்று மக்களின் அன்றாடப் பிரச்சினையும் சேர்ந்துள்ளது. அதற்காகவும் போராட வேண்டிய நிலை காணப்படுகிறது - என்றார்.

# சிங்களவரின் 72 சதவீத ஆதரவு பொ.ஐ.முன்னணிக்கு உண்டு

## பிரதமர் ரத்னசிறி நம்பிக்கை

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சிங்கள மக்களில் 72 சதவீதமானவர்களின் ஆதரவைப் பெற்று மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும்.

இவ்வாறு பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரசாங்க ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் தொடர்பான வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நாட்டில் பௌத்த கலாசாரத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற சிந்தனையுடன் எமது அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. எனவே பெரும்பான்மையான சிங்கள பௌத்தர்கள் எமக்கே வாக்களிப்பர். அதேவேளை ஜனநாயக மரபுகளையும் நாடாளுமன்ற சம்பிரதாயங்களையும் கட்டிக்காக்கக் கூடிய பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின்மீது மாபெரும் மக்கள் அலையொன்று வீச ஆரம்பித்துள்ளது. எமது அரசாங்கமே மீண்டும் ஆட்சி அமைக்கும் என்ற உறுதியான நம்பிக்கை எமக்கு உண்டு. மக்களைக் கொன்று குவிக்கும் ஒரு கட்சியை ஆட்சியில் இருத்த மக்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள்.

இப்படிப் பிரதமர் தெரிவித்தார். (இ-7)

## ஒருவர் காயம்

நெல்லியடி,ஓகஸ்.27

தோட்ட வேலைக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 7 மணியளவில் அல்வாய் சோலையம்மன் கோயிலடியில் இடம்பெற்றது.

அல்வாய் வடக்கு திடலைச் சேர்ந்த வடிவேலு மணிவண்ணன் (வயது 30) என்பவரே வாள் வெட்டுக்கு இலக்காகி இரு கால்களிலும் கைகளிலும் காயங்களுடன் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-109)

## நூலக உதவியாளர் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஓக.27

கொக்குவில் இந்துக் கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படும் நூலக உதவியாளர் பயிற்சி வகுப்பு மீண்டும் நாளை பிற்பகல் 3.30மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

பயிற்சிக்காகத் தெரிவானவர்களுக்கு கல்லூரி அதிபர் இதனை அறியத்தருகின்றார்.

இப்பயிற்சி வகுப்பில் புதிதாகச் சேர்ந்துகொள்ள விரும்புபவர்கள் அன்றையதினம் கல்லூரிக்குச் சமுகம் தருமாறும் அவர் கேட்டுள்ளார்.(ஐ)

# ஐ.தே.க. ஆட்சிக்கு வந்தால் ஜனாதிபதி முறை ஒழிப்பு!

கொழும்பு,ஓக.27

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி பெரும்பான்மைப்பலத்துடன் ஆட்சிக்கு வந்தால் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படும். இது தொடர்பான முடிவை கட்சி எடுத்துள்ளதாகக் கட்சிவட்டாரங்களை மேற்கோள்காட்டி 'ராவய' சிங்கள இதழ் தெரிவித்துள்ளது.

ஐ.தே.கவின் இந்த முடிவு இன்னும் சில தினங்களில் வெளியிடப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த தடவை ஆட்சிக்கு வந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசும் ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தது தெரிந்ததே. (ஐ)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 26ஆம் திகதிவரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

513/151785/A 513/151785/B
513/151785/C

**கோப்பாய்**

511/154305/A 511/154305/B
511/154305/C 511/154306/A
511/154306/B 511/154310/A
511/154310/B 511/154310/C
511/154344/A 511/154344/B
511/154413/A 511/154413/B
511/156697/A 511/157491/A
511/157491/B 511/157491/C

**நல்லூர்**

511/143566/A 511/144872/A
511/144872/B 511/144872/C
511/144873/A 511/144873/B
511/144946/A 511/144955/A
511/144955/B 511/145179/A
511/145179/B 511/145179/C
511/145179/D 511/145673/A
511/156709/A 511/156851/A
513/150680/A 513/152057/C
513/152075/A 513/152075/B
513/152147/A 513/152147/B
513/155157/A 513/155157/B

**சண்டிலிப்பாய்**

513/151972/A 513/151972/B
513/151972/C 513/151972/D
513/153309/A 513/153309/B
513/153309/C 513/153309/D

**தெல்லிப்பழை**

513/150545/A 513/150546/A
513/150546/B 513/155117/A
513/155117/B 513/155154/A

**உடுவில்**

511/145223/B 511/145223/A
513/151863/A 513/151863/B
513/151863/C 513/151863/D
513/151863/E 513/151863/F
513/151981/A 513/151981/B
513/152005/A 513/152119/A
513/152174/A 513/152174/B
513/153451/A 513/153451/B
513/155287/A 513/155288/A

(முன்னர் வந்த பதிவு இலக்கங்கள் 8ஆம் பக்கத்தில்)

## விண்ணப்பங்களை அனுப்ப நடவடிக்கை

தேசிய கல்வியியல் கல்லூரிக்கு புதிய கல்வி ஆண்டுக்கு விண்ணப்பிக்கும் யாழ். மாவட்ட மாணவர்களின் விண்ணப்பங்களை சேகரித்து கொழும்புக்கு அனுப்ப ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று யாழ். தேசிய கல்வியியல் கல்லூரிப் பீடாதிபதி தி.கமலநாதன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பிக்கும் மாணவர்கள் அடுத்த மாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை மருதனார்மடத்தில் இயங்கும் தேசிய கல்வியியல் கல்லூரியில் ஒப்படைக்க வேண்டும் என அவர் கேட்டுள்ளார். (இ-7)

## நெடுந்தீவில் இன்னிசை கானங்கள்

நெடுந்தீவு கலாசார சபையின் ஆதரவில் நெடுந்தீவு இன்னிசை கழகம் வழங்கும் இன்னிசை கானங்கள் நிகழ்ச்சி இன்றிரவு 7.30 மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலய திறந்த வெளி அரங்கில் இடம்பெறவுள்ளது.

இன்னிசைக் கழகத் தலைவர் இ.நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இளம் பாடகர்கள் பலர் பங்குபற்றுகின்ற


## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீவிக்கிரம வருடம் ஆவணித் திங்கள் 11ஆம் திகதி (27-08-2000) ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணி முதல் 4.30 மணிவரையுள்ள பூச நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய தனுசு லக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்

எமது சிரேஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
ஸ்ரீ மீன சிவா
அவர்களுக்கும்
(லண்டன்)



எமது செல்வப் புதல்வி
திருநிறை செல்வி
குலமகள்
அவர்களுக்கும்
(லண்டன்)

இறைவன் திருவருள் துணை கொண்டு திருமாங்கல்யதாரணம் நடத்தத் திருவருள் கைகூடியிருப்பதால் திருமணம் லண்டனில் உள்ள சிவயோகம் கல்யாண மண்டபத்தில் நடைபெறும். அச்சுபவேளையில் மணமக்களின் இல்லத்தில் இடம்பெறும் விருந்துபசாரத்தில் தாங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து இந்த சபையைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

மணமகனின் பெற்றோர்
திரு. திருமதி சிதம்பரப்பிள்ளை
கூடைமாவடி,
கண்டாவளை,
கிளிநொச்சி.

மணமகளின் பெற்றோர்
திரு. திருமதி சுப்பையா
(ஆம்பரன் ஸ்ரோர்ஸ்)
வராத்துப்பளை, புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(C/12716)



உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருஷம் ஆவணி மாதம் 14 ஆம் நாள் (30.08.2000) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை வரும் சுப வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
காந்தன்




எமது புத்திரி
திருநிறை செல்வி
காயத்திரி

இருவருக்கும் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டுள்ளதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

இருவீட்டார் அழைப்பு
இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி
க. தெட்சணாமூர்த்தி
(சோதி)
32, சேர். பொன். இராமநாதன் வீதி,
நாச்சிமார்கோயிலடி,
யாழ்ப்பாணம்.

திரு. இ. வே. கந்தசாமி பத்தர்
வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள்
தேவஸ்தான தர்மகர்த்தா சபைத் தலைவர்,
திரு. திருமதி க. சாந்தகுமாரன்
(தீயணைப்புச் சேவை, யாழ். மாநகரசபை)
555/5, மதவடி ஒழுங்கை,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(7729)

# புதிய இடதுசாரி முன்னணியின் கோரிக்கை தமிழரின் அடிப்படை உரிமையை மீறுகிறது

## கண்டனம் தெரிவித்து ஈ.பி.டி.பி. அறிக்கை

யாழ்ப்பாணம்,ஒக.27

எதிர்வரும் பொதுத்தேர்தலை வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்கள் புறக்கணிக்க வேண்டுமென புதிய இடதுசாரி முன்னணி வேண்டுகோள் விடுத்திருப்பது வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களது அடிப்படை அரசியல் உரிமைகளை மீறும் செயலாகும். இத்தகைய பொறுப்பற்ற வேண்டுகோள்களை எமது மக்களுக்கு விடுத்து அவர்களைத் தவறாக வழி நடத்துபவர்களை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது.

மேற்கண்டவாறு ஈ.பி.டி.பி. நேற்று விடுத்த பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் யுத்தம் இன்று அல்லது நேற்று உருவாகியது அல்ல. இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்தே தமிழ் மக்கள் மீது இன்றைய யுத்தம் வெடிப்பதற்குரிய காரணிகளை சிங்களப் பேரினவாதிகள் உருவாக்கியிருந்தார்கள். இவர்கள் மத்தியில் வாழ்ந்து சோசலிச சித்தாந்தத்தை கடைப்பிடித்து வரும் புதிய இடதுசாரி முன்னணியினர் இன்றுவரை தமிழ் மக்களது அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண உருப்படியாக எதுவும் செய்யவில்லை. இதற்கு மாறாக எமது மக்களது எரியும் பிரச்சினையை வைத்து அரசியல் பிழைப்பு நடத்தியவர்கள் தான் இந்தப் புதிய இடதுசாரி முன்னணியினர்.

தமிழ் மக்களது பிரச்சினைக்கு நிரந்தரமான, நீதியான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்கவே ஈ.பி.டி.பி.யினராகிய நாம் ஜனநாயக வழியில் போராடி வருகின்றோம். இதற்காக நாடாளுமன்ற பிரதிநிதித்துவ அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசின் மீது அழுத்தங்களைப் பிரயோகித்தும் சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள்களை விடுத்தும் எமது பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எட்ட எமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்.

யுத்தம் எமது மக்களுக்கு எந்தத் தீர்வையும் தரப்போவதில்லை. இதற்கு மாறாக தமிழ்மக்களின் பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கி, அவர்களை ஒரு அவலத்திற்குள் தள்ளிவிட்டுள்ளது. இன்று குடாநாட்டிலுள்ள மக்களது பெரும்பாலான அன்றாட அவலங்களுக்கு ஈ.பி.டி.பி.யினராகிய நாமே தீர்வு கண்டு வருகின்றோம். இதனை எமக்குக் கிடைத்த நாடாளுமன்ற பிரதிநிதித்துவ அதிகாரத்தைப் பயன்படுத்தியே செய்ய முடிந்தது.

வடக்கு-கிழக்கில் உள்ள மக்கள் தேர்தலைப் புறக்கணித்து தமக்குரிய நாடாளுமன்ற ஆசனங்களை வெற்றிடமாக்குவார்களாயின், நாம் எத்தகைய அதிகாரத்தைக் கொண்டு எமது மக்களுடைய அரசியல் போராட்டத்தை முன்னெடுப்பது? எமது மக்களுடைய அன்றாட அவலங்களை எத்தகைய அதிகாரத்தைப் பயன்படுத்தி தீர்வு காண்பது? இந்த நிலைமைகளை கருத்திற்கொண்டு எமது மக்கள் தங்கள் நாடாளுமன்றப் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்குத் தவறாமல் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்த வேண்டும். இல்லாவிடில் ஒவ்வொருவரும் எமது மக்கள் சமூகத்திற்கு புரிந்த அரசியற் தற்கொலையாகவே இருக்கும்.

1989 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது மக்கள் தெரிவுசெய்த பிரதிநிதிகள் தொடர்ந்து வந்த அரசியல் சூழ்நிலையினால் தங்கள் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை இராஜிநாமா செய்தார்கள். இறுதியில் என்ன நடந்தது? நாடாளுமன்ற இராஜிநாமா மூலம் தமிழ் மக்களுக்கு எதுவும் பெரிதாக வரலாற்றில் நடந்ததில்லை. ஆனால் இப் பிரதிநிதித்துவத்தைப் பயன்படுத்தி எமது மக்களுக்கு ஆற்றக்கூடிய அரசியல், அன்றாட வேலைகளையும் குறைந்தபட்சம் அபிவிருத்திப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டையும் கூட நாம் இழந்திருந்தோம். இந்த நிலையில் 1994 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வரையில் வெற்றிடமாக விடப்பட்டிருந்த நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்திற்கு நாம் போட்டியிட்டு தமிழ் மக்களின் அரசியல் அரங்கத்தில் ஏற்பட்டிருந்த வெற்றிடத்தை நிரப்ப முற்பட்டிருந்தோம்.

இந்த பொதுத் தேர்தலிலும் கூட பெரும்பாலான எமது மக்களுக்கு தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்கின்ற வாய்ப்பும் வசதியும் மறுக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த வசதி வாய்ப்பு மறுக்கப்பட்ட மக்களுக்கும் கூட இந்த நாடாளுமன்ற பிரதிநிதித்துவ அதிகாரத்தைப் பயன்படுத்தி பல அன்றாட அலுவல்களைச் செய்து முடிக்கக் கூடியதாக இருக்கின்றது என்பது இன்று வெளிப்படையாக தெரியவந்துள்ளது.

எமது மக்களுடைய அரசியல் பிரச்சினைகளையும் அன்றாட அவலங்களையும் சரிவர புரிந்து கொள்ளாத புதிய இடதுசாரி முன்னணி, கடந்த நாடாளுமன்றக் காலப்பகுதியில் பெரும்பாலான காலங்களை ஆளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடன் சேர்ந்தே கழித்து வந்தது. இன்று ஐக்கிய முன்னணியில் இருந்து தன் அரசியல் கூட்டை உடைத்துக்கொண்டு வெளியே நிற்கும் புதிய இடது சாரி முன்னணி, வடக்கு-கிழக்கில் போட்டியிட முடியாத சூழலில், எட்டாப்பழம் புளிக்கும் எனும் நிலைப்பாட்டில் தமிழ் மக்களிடம் இத்தகைய வேண்டுகோளை விடுத்துள்ளது. இதனையிட்டு மக்கள் தமது வாக்குகளை அளிப்பது தொடர்பாக எந்தவிதக் குழப்பமும் அடைய வேண்டாமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) கேட்டுக் கொள்கின்றது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## கிரனேட் வெடித்து 2 சகோதரர் காயம்

வவுனியா,ஒக27

அநாதரவாக கிடந்த கிரனேட் ஒன்றை வெடிக்க வைக்க முயன்ற சகோதரர்கள் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை கிளிநொச்சி மாவட்டம்-பனங்காமம் பகுதியில் இடம்பெற்றது.

பனங்காமத்தைச் சேர்ந்த ஏகாம்பரம் யோகேஸ்வரன் (வயது16), ஏகாம்பரம் தவக்குமார்(வயது13) ஆகியோரே காயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-7)

## தமக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லெப்.ஜெனரல் லயனல் பலகல்லவே இதுவரை பயன்படுத்திவந்தார்.

இராணுவத்தின் தளபதியாக மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா நியமிக்கப்படுவார் என்று அண்மைக் காலத்தில் ஊகங்கள் அடிபட்டு வந்தன. எனினும் லயனல் பலகல்லவே அப்பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஜோசப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர் பட்டியலைத் தயாரித்ததாகக் கூறப்படுகின்றது.

எனினும் அந்தப் பட்டியல் வெளியிடப்படவில்லை.

மட்டக்களப்பில் பத்துக்கும் மேற்பட்ட அணிகள் தேர்தல் களத்தில் குதிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ-3-21)

## யாழ்.,வன்னி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதன்மை வேட்பாளராகப் போட்டியிடவிருக்கின்றார் என்றும்-

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இம்மானுவேல் சில்வாவும் அங்கு போட்டியிடவிருப்பதாகவும் - அவர் சொன்னார்.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதற்கான பேச்சுக்கள் இடம் பெறுகின்றன. முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் நாடு திரும்பியதும் இது விடயமாக முடிவு எடுக்கப்படும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எமது அணி சார்பில் இரா.துரைரத்தினமும், திருகோணமலை மாவட்டத்தில் அன்ரனி நிக்கலஸ் பாய்வாவும் போட்டியிடவுள்ளனர்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி தேசிய பட்டியல் மூலம் எம்.பியாக நியமிக்கப்பட்டு அமைச்சராக்க உறுதியளிக்கப்பட்டுள்ளதாக வெளிவந்த செய்தி குறித்து கருத்துக் கூறிய வரதராஜப்பெருமாள், சுயாதீனமாகச் செயற்படக்கூடியவராக இருந்தால் அமைச்சராகவோ, தேசியப் பட்டியல் மூலமாக எம்.பியாகவோ வருவது பிரச்சினை இல்லை என்று பதில் அளித்தார்.

(11 ஆம் பக்கத்தில் மற்றும் ஒரு செய்தி) (இ-3)

## மல்லாகத்தில் மிதிவெடி

யாழ்ப்பாணம்,ஒக.27

மல்லாகம் பகுதியில் தோட்டம் ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்த சமயம் அங்கு புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் சிக்கி காயம் அடைந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

மல்லாகம் நீதிமன்ற வீதியைச் சேர்ந்த சின்னத்துரை பரமகுமார் (வயது32) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார். (இ-9-10)

## தம்மை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாகப் பிரித்து தமிழ் மக்களுக்கு கிடைக்கக் கூடிய அதிகாரங்களையும் இல்லாமல் செய்வது ஆகும்.

இந்தத் தீர்வுத் திட்டத்தை மிகவும் காரசாரமாக தமிழ் மக்கள் மத்தியில் பிரசாரப்படுத்தியவர் வரதராஜப்பெருமாள்தான்.

இந்த அரசாங்கம் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறது. யுத்தத்தின் மூலம் சமாதானம் என்று சொல்லிக் கொண்டு கோடிக்கணக்கான பணத்தினைச் செலவு செய்து குண்டுவீச்சு விமானங்களையும், எறிகணைத் தாங்கிகளையும் வாங்கிக் குவித்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் அரசுக்கு ஆதரவு அளிப்பதை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

இந்தச் சூழ்நிலையில் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தும் ஓர் அரசை ஆதரிப்பது என்பது எமது அணியினால் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு விடயம். நிச்சயமாக வரதராஜப்பெருமாளது கோரிக்கைக்கு மக்கள் நல்ல பதிலடி கொடுப்பார்கள் என்றே நான் நம்புகிறேன் - இப்படி அவர் மேலும் கூறினார். (இ-5)


கல்விக் கல்லூரி,
கல்வி நிர்வாக சேவை
விண்ணப்பப்படிவங்கள்
இன்றும் (27.08.2000)
விற்பனையாகின்றன.
வர்த்தமானி பார்வையிடலாம்.
பாரதி பதிப்பகம்
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


## 450 தொண்டர் ஆசிரியருக்கு விரைவில் நிரந்தர நியமனம்

### டக்ளஸ் உறுதிமொழி

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் பணிபுரியும் 450 தொண்டர் ஆசிரியர்களையும் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

நேற்று தம்மைச் சந்தித்த யாழ். மாவட்ட தொண்டராசிரியர் சங்க உறுப்பினர்களிடமே அவர் இந்த உறுதிமொழியை அளித்தார்.

இந்தச் சந்திப்பில் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான வி.கே.குகேந்திரனும் பங்குபற்றினார்.

யாழ். மாவட்டத்தில் நியமனம் வழங்குவதற்காக ஏற்கனவே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய ஆயிரத்து 14 பேரில் அறுநூறு பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்றும் -


எஞ்சியவர்களுக்கும் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் - டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (இ-3)


BITSMANS கல்வி நிறுவனம் மானிப்பாய்
SPOKEN ENGLISH WITH GRAMMAR
BY:-GRAMMAR KING..... M.A.HARI
B.A. Dip. in. Eng.
ஆரம்பம்: 29.08.2000 செவ்வாய் காலை 9.00
(மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருப்பதனால் அனுமதிக்கு முந்துங்கள்)
(77669)

Member of I Train U.S.A
கணனிக் கற்கை நெறிகளுக்காக
IBMS இன் 5000 மாணவர்களுக்கான மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2000/2001
மேற்படி புலமைப்பரிசிலிற்கான அனுமதிப்பரீட்சை எதிர்வரும் 13.09.2000 அன்று நடைபெறும். அனேக பெற்றோர்கள், மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க விண்ணப்ப முடிவு திகதி 05.09.2000 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
குறிப்பு:- விண்ணப்ப முடிவு திகதி எக்காரணம் கொண்டும் நீடிக்கப்படமாட்டாது.
முதன் முறையாக BIT அனுமதிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள யாழ். பரீட்சார்த்திகள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
BIT இன் முதலாம் ஆண்டுக்கான விரிவான பாடத்திட்டத்தினை எமது அலுவலகத்தில் பார்வையிடலாம்.
Director (Ad)
IBMS No. 701, K.K.S. Road, Jaffna.
(C/12713)

STP Computer World
54A, Palaly Road, Kantharmadam TP 2674
இலவச பயிற்சி நெறிகள்
ஆரம்பம்
Batch A 27-08-2000
Batch B 30-08-2000
நேரம் : 9.00 A.M
இலவச பயிற்சி நெறிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பாடவிதானங்களின் அடிப்படையில் பரீட்சைகள்.
புலமைப் பரிசில்கள்
பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கையில் 75% மான மாணவர்களுக்கு பயிற்சிக் கட்டணத்தில் 100% கழிவு (முழுமையான புலமைப் பரிசில்)
குறிப்பு
February மாதம் நடைபெற்ற பரீட்சையில் புலமைப்பரிசில் பெற்ற / பல்வேறு காரணங்களினால் பயிற்சியை இடைநிறுத்திக் கொண்ட மாணவர்களுக்கான வகுப்புக்கள் 30-08-2000 அன்று ஆரம்பமாகின்றது.
பதிவுகளை பயிற்சி நெறி ஆரம்பமாகும் திகதிக்கு முன்னர் காரியாலயத்தில் நேரடியாக வந்து உறுதிப்படுத்தவும்.
- நிர்வாகி

அம்மணியை அம்பலப்படுத்தியது
செம்மணி!
அவலங்கள் போக்கிடவே
ஆதரிப்பீர்,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியை!
(ஈ.பி.டி.பி)
வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!


(C/12715)
1998ஆம் ஆண்டு யாழ். மாவட்ட அபிவிருத்திக்கென ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களது நிதியில் இருந்து 220 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27-08-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.